வி.எச்.ஆர் பெருங்காயம்



வெட்டுக்காயத்தால் ரத்தம் விஷமாவதை தடுத்துக்கொள்ளுங்கள்

ஜாம்-பெக் அற்புத கிருமிநாச நிவாரணி.

ரணத்தை அலக்ஷியம் செய்தால், அவை விஷமாகமாறி, பல மணிநேரம் வலி உபத்திரவம் ஏற்படும். உங்கள் வெட்டுக்காயம், ரணத்தை ஜாம்-பெக் மெழுகால் குணப்படுத்தி இவ்வித தொந்திரவைப் போக்கிக் கொள்ளலாம். ஜாம்-பெக்கிலுள்ள சுத்திகரிக்கப்பட்ட மூலிகை ஆயில்கள, சருமத்திற்குள் சென்று, வலியை சமனப்படுத்தி, வீக்கத்தைக் குறைத்து, புண்பட்ட இடத்திலுள்ள சகல விஷத்தையும் போக்கிவிடும். ஜாம்-பெக் தழும்பின்றி குணப்படுத்தும். எல்லா மருந்து வியாபாரிகளாலும் ரூ. 1 அல்லது 2/4 வீதம் விற்கப்படுகின்றது. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:— மெஸர்ஸ் தாதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, தைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.



தலைநிறைந்த கூந்தலே முகத்தின் அழகை எடுத்துக்காட்டுவது. கூந்தலே முக அழகை ஆக்குவதும், அழிப்பதும். கூந்தலழகையும்முக அழகையும் இன்றே கேசவர்த்தினியைக்கொண்டு விருத்திசெய்யுங்கள்.

அற்பகேசத்தைவிட அழகுக்கு ஹானி வேறில்லை. இதைப் பரிஹரிக்கக் கேசவர்த்தினியைவிடச் சிறந்த மருந்துமில்லை. இழந்த கூந்தலையும், இளமையையும் கேசவர்த்தினியைக் கொண்டு இன்றே பெறுங்கள்.

அழகுள்ளவர். ஒரு சிலரே. ஆனல் கூந்தலழகையோ கேசவர்த்தினி உபயோகத்தால் ஒவ்வொருவரும் பெறலாம். கேசசம்பத்து படைத்தவர் அதை இழக்காமல் கேசவர்த்தினி கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியால் அதை அடையுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது, விருத்திசெய்வது, அழகுபடுத்துவது விலை அணு 12. மேற்செலவுவேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்.

தென் இந்திய ரஸாயன சாலை.
ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்

மெலிவுற்று ஆரோக்யத்தை ஏன் அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடாது?



தினசரி இரவு இரண்டு பைல்பீன்ஸ் மாத்திரைகளை தவருமல் உட்கொண்டு வந்தால், நீங்கள் சந்தோஷமாகவும், வசீகரமாக மெலிவுற்றும், திட ஆரோக்யத்துடனும் இருக்கலாம். பைல்பீன்ஸ் சுத்த தாவர சத்து, இவை சரீரத்தை சீர்படுத்தி, ரத்தத்தை சுத்தி செய்து, தினசரி உணவிலுள்ள அனுவசியமான பொருள்களை வெளிப்படுத்திவிடும். இதனால் உங்கள் ஆரோக்யம் அபிவிருத்தியடையும் மேனி அழகுற்று நீங்கள் யௌவனமாகவும், திடமாகவுமிருக்கலாம்.

எல்லா மருந்து வியாபாரிகளும் பைல்-பீன்ஸ் பாட்டில் ரூ. 1 வீதம் விற்கின்றனர்.

BILE BEANS

பைல்பீன்ஸ் ஆரோக்யத்தையும், அழகையும் அபிவிருத்தி செய்யும்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம கணிக்கரூ. 2. நேரில் ஒரு ஜாதகம பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், "சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்பேட்டை, மதராஸ்.

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல்; ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், காதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியுமுண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்.
கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ் 272, சக்ரவார் பேட்டை

காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

★

காங்கிரஸ் மகாசபை சரித்திரம் முதல் பாகம் 2 0 0
இரண்டாம் பாகம் ரூ. 2. மூன்றும் பாகம் ரூ. 2.
(மூன்று பாகங்களும் ஒரே தடவையில் வாங்கும் சந்தாதாரருக்கு ரூ. 4.)

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

சூதகம் நின்றிருந்தால்

3 நீட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, *Editor*, C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 14 No 2 14-2-43 வாரப்பதிப்பு Price 2 Annas

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

சுதேசமித்திரன்
வாரப்பதிப்பு 14-2-'43

என் இந்த வீண்பழி?

நவநகர் மகாராஜா சீமைக்குப் போயிருந்தார். இப்போது திரும்பி வந்துவிட்டார். அங்கு யுத்த மந்திரி சபையில் இந்தியப்பிரதிநிதிகளில் ஒருவராகப் பதவி வகித்தார். 'போயிருந்தாரே! உருவாக என்ன செய்தார்? இந்தியாவில் தலைவர்களெல்லாம் சிறைப்பட்டுக் கிடக்கிறார்கள். நெருக்கடியைத் தீர்க்க ஏதாவது வழிதேடி வந்தாரா?' என்று ஜனங்கள் கேட்பது இயற்கை. 'இந்திய நெருக்கடிக்குப் பரிகாரம் இந்தியர் கையில்தானிருக்கிறது' என்று இந்தியா மந்திரி அமெரி சொன்னாராம். அதோடில்லாமல் யுத்தமந்திரி சபையின் கருத்தும் அதுவேதானென்கிறார்.

இந்தியாவைப்பற்றி யுத்த மந்திரி சபைக் கூட்டங்களில் பிரஸ்தாபமே கிடையாதாம்! தமது சொந்த அபிப்பிராயமென்னவென்பதையும் அவர் தெளிவாகச் சொல்லிவிட்டார்! நெருக்கடிக்குப் பரிகாரம் நம்கையில்தானிருக்கிறது. இதில் வெளியார் தலையிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது பிசகு என்கிறார். "அமெரி, கருத்தையும் யுத்த மந்திரி சபையின் கருத்தையும் அறிந்து வரவா இவர் சீமைக்குப் போனார்? அவர்கள் அபிப்ராயம்தான் நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறதே. இவர் ஏன் வீணாக இவ்வளவு தூரம் போக வேண்டும்" என்று ஜனங்கள் நினைத்தால் அதில் தவறு ஒன்றுமில்லை.

யுத்த மந்திரி சபையின் கவலையெல்லாம் யுத்தப்பிரச்னைப்பற்றியே திரும்பியிருக்கிறதென்றார் இந்திய அரசியல் நெருக்கடிப்பற்றியே பிரஸ்தாபமில்லையென்றும் கூறுகிறார். யுத்த முயற்சி திறம்பட நடந்து வெற்றி காணவேண்டுமாயின் ஜனங்களின் பரிபூர்ணஒத்துழைப்பு அவசியம். இதில்லாததால் தான் பர்மா, மலேயா விபரீதங்கள் சம்பவித்தன. நவநகர் மகாராஜா புதிதாகத்தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமல்ல இது. நேசநாட்டினர் எதிரியை முறியடிக்க இந்தியாவை முக்கிய தளமாக நம்பியிருக்கின்றனர். இந்த சமயத்தில் இந்தியாவில் அரசியல் நெருக்கடியைத் தீர்க்காமல் விட்டுவிட்டு பழியை இந்தியர் தலையிலே சுமத்துவது விவேகமா? யுத்தமுயற்சியைத் தனியாகப் பிரித்துப் பரிசீலனை செய்வதுதான் உசிதமா?

நவநகர் மகாராஜ யுத்த மந்திரி சபையின் 24 கூட்டங்களில் கலந்துகொண்டதாகச் சொல்கிறார். போகவரச் செலவுக்கு மட்டுமே பணம் பெற்றதாகவும் எனவே மற்ற பிரதிநிதிகளைக்காட்டிலும், எதைச் சொல்வதற்கும் தமக்கு அதிக உரிமை இருந்ததென்றும் சொன்னார். ஆனால் இந்த உரிமையை அவர் அங்கு சரியாகப் பிரயோகித்திருந்தால் நிலைமை இன்று இப்படியா இருக்கும்?

நெருக்கடி தீர காந்திஜியைக்கண்டு பேசவேண்டுமென்று ராஜாஜி, டாக்டர் முக்கர்ஜி, இந்தியாவின் பிரதம பாதிரி முதலியோர் முயற்சி செய்தார்கள். அம்முயற்சிக்குச் சர்க்கார் இடம் கொடுக்காமல் முட்டுக்கட்டை போட்டனர். இவற்றையெல்லாம் நவநகர் மகாராஜா நன்கு சிந்தித்திருந்தால் மிஸ்டர் அமெரி கோஷ்டியை போலவே தாமும் இந்தியர் மீதே இப்படிப் பழி சுமத்தத் துணிவாரா?

சென்ற வார நிகழ்ச்சிகள்

மகாத்மாஜி உபவாசம்

10-ந்தேதி முதற்கொண்டு 3 வார காலம் வரையில் தாம் உபவாசத்தை மேற்கொள்ளப் போவதாக மகாத்மாஜி வைஸ்ராய்க்கு அறிவித்து விட்டார். உண்ணாவிரதம் சக்திக்குத் தகுந்தபடியே இருக்குமென்றும், மகாத்மா ஜலத்தில் பழ ரஸத்தைக் கலந்து அருந்துவாரென்றும், சாகும் வரையில் உண்ணாவிரத மிருக்க வேண்டுமென்பது அவரது கருத்தல்லவென்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

உபவாச காலத்தில் மகாத்மாவை விடுதலை செய்வதாகச் சர்க்கார் சொன்னார்கள் என்றும், அப்படியாயின் தாம் உண்ணாவிரதத்தை விட்டு விடுவதாக காந்திஜி தெரிவித்ததாகவும் சர்க்கார் அறிக்கை தெரிவிக்கிறது.

* * * *

சென்ற 7-ந்தேதியன்று ஹிந்து காரியாலயததில் துருக்கிப்பத்திரிகைக்காரர்களுக்கு ஓர் தேககச்சேரி நடத்தப்பட்டது.

முதல் படத்தில் இடதுபுறமிருபபவர்தான் கோஷ்டியின் தலைவர் அட்டே. நடுவேயிருப்பவர் எம். பெல்ஜ், மூன்றுவதாக நிற்பவர் 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸன்.

இரண்டாவது படத்தில் தேக்கச்சேரியில் எம். பெல்ஜும் ஸ்ரீ ஸ்ரீனிவாஸனும இருக்கின்றனர்.

பக்ஷணங்களுக்கு அரிசி மாவு இல்லை

ஜனங்களின் சாதாரண தேவைக்காக நகரிலும், சுற்றுப் புறங்களிலும் கைவசமுள்ள அரிசியையும் அரிசிப் பொருள்களையும் சேகரிக்கும் உத்தேசத்துடன் பம்பாய் சர்க்கார், அரிசி மாவையோ இதர அரிசிப் பொருள்களையோ, தோசை முதலிய பக்ஷணங்களுக்கு உபயோகிப்பதை தடை செய்து உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

பம்பாயிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ளவர்கள் தங்கள் கைவசமுள்ள அரிசி, நெல், அரிசி மாவ் முதலியன பத்து மணங்கு அல்லது அதற்கு மேலாக இருப்பின் வாராவாரம் கையிருப்பைச் சர்க்காருக்கு அறிவிக்கவேண்டும்.

சென்னையில் அரிசிப் பங்கீடு

சென்னையில் அரிசிப் பங்கீடு சீக்கிரத்திலேயே அமுலுக்கு வருமென்று தெரிகிறது. வயது வந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளைக்கும் ஐந்து ஆழாக்கு அரிசி கொடுப்பதா அல்லது மூன்று ஆழாக்கா என்பதைப்பற்றிச் சர்க்கார் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

அகில இந்திய உணவுப்பொருள் மகாநாடு

இந்திய சர்க்கார் கூட்டியுள்ள அகில இந்திய உணவுப் பொருள் மகாநாடு 24-ந் தேதி புதிய டில்லியில் நடக்கும்; இந்தியாவில் உபரியாக உள்ள தானியப் பொருள்களைச் சேகரித்து, கட்டுப்படுத்தி, வினியோகிப்பது சம்பந்தமாகச் சர்க்கார் போட்டிருக்கும் திட்டத்தின் விவரங்களைப்பற்றி இம்மகாநாட்டில் விவாதிக்கப்படும்.

இதழில் இருப்பவை

	பக்கம்
போர் போகும் போக்கு	4
குண்டலகேசி	5
நாடோடிப் பாட்டுக்கள்	7
கண்டுபிடித்தவர்கள் இவர்களே!	8
திட்டமான வாழ்க்கை	9
வெள்ளிக் கூஜா	11
சங்கீதப் பகுதி	12
தமிழர் வீரம்	13
இலங்கை-மேல்நாடு உறவு	14
கடவுளின் ஸ்பரிசம்	17
ஜோதிர்மண்டலம்	18
ஸ்டாலினின் புகைப் படம்	18
சொக்கனின் கர்வ பங்கம்	19

ரஷ்யப் போர் முனை

சோவியத் படைகள் ஒவ்வொரு நாளும் ஜெர்மனியரின் நிலைப் பெருக்கி வருகின்றன. அப்படைகள் குர்ஸ்க் என்ற முக்கியமான நாஸித் தளத்தைக் கைப்பற்றிவிட்டன. 2000 மைல் நீளமுள்ள ரஷ்யப் போர் முனையில் எதிரிகளுக்கு மத்தியத் தளமாக உபயோகப்பட்டு வந்தது அந்த தளம்தான். குர்ஸ்க்குக்கும், ஓரலுக்கும் நடுவேயுள்ள ரயில் பாதையையும் ரஷ்யர் துண்டித்துவிட்டார்கள். குர்ஸ்குக்குத் தெற்கேயுள்ள கார்காவுக்கும் ஆபத்து நெருங்கிக்கொண்டிருக்கிறது. அந்நகருக்கு வடக்கிலும், தெற்கிலும் ரஷ்யர் 60 மைலுக்குள் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். கார்கா

வுக்கு வட்க்கே முன்னணி அரண் போலுள்ள பியல்கரோட் என்ற கேந்திரஸ்தானம் ரஷ்யர் வசமாகிவிட்டது.

கார்காவுக்குத் தென்கிழக்கிலும் சோவியத்படைகள் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கும் ஸ்டாலினே என்ற நகருக்கும் உள்ள தூரம் குறைந்து வருகிறது. ரஷ்யர் அந்நகரைக் கைப்பற்றி பிறகு தென் மேற்கே முன்னேறுவராயின், ராஸ்டாவ் பகுதியிலுள்ள ஜெர்மனியர் தப்ப வழியில்லாமல் போய்விடும். இதை உணர்ந்த எதிரிகள் இப்போதே ராஸ்டாவிலிருந்து டகன்ராகை நோக்கிப் பின்வாங்க ஆரம்பித்துவிட்டதாக அங்கரா ரேடியோ அறிவிக்கிறது. ராஸ்டாவுக்கும், தெற்கேயிருந்து அதை நோக்கி நெருங்கிக்கொண்டிருக்கும் ரஷ்யருக்கும் 10 மைல் தூரம் கூட இல்லை. பத்தாவது மைலில் உள்ள படாய்ஸ்கை ஏற்கனவே நாஸிகள் இழந்துவிட்டனர். ராஸ்டாவுக்குச் சில மைல் தெற்கே நடந்த பெரிய டாங்கிப் போராட்டத்தில் எதிரிப் படை திரும்பி யோட நேர்ந்ததாகத் தெரிகிறது. ராஸ்டாவுக்கு மற்ற திக்குகளிலும் ஆபத்து வலுத்துக்கொண்டிருக்கிறது. இந் நிலையில் அந்நகரைக் காக்க ஜெர்மனியர் தீவிர முயற்சி செய்வரா, அல்லது தங்கள் படைகள் உயிர் தப்பினல் போதுமென எண்ணி அவற்றை வாபீஸ் பெறுவரா என்பது தெரிய வேண்டும்.

ரஷ்யர் திருப்பித் தாக்கிவரும் சென்ற $2\frac{1}{2}$ மாத காலத்தில் ஒரு லக்ஷம் சதுர மைல் விஸ்தீர்ணமுள்ள பூமியைத் திரும்பக் கைப்பற்றியிருக்கிறார்கள்.

* * * *

ஆப்பிரிக்க அரங்கம்

வட ஆப்பிரிக்காவில் எகிப்திலிருந்து மேற்கு நோக்கி ஓடிய ரோமலின் படைக்கும் ஏற்கனவே டியுனிஸியா பகுதியிலுள்ள வான் ஆர்னிமின் படைக்கும் தொடர்பு ஏற்பட்டு விட்டதாகத் தெரிகிறது. ரோமலின் படை தங்கள் சகாக்கள் சேர்த்து வைத்திருந்த டாங்கிகள் முதலிய சாதனங்களைக் கொண்டு தென் டியுனிஸியாவிலுள்ள பெய்ட் கணவாயை நேசத்துருப்புகளிடமிருந்து கைப்பற்றின. கேப்ஸாவுக்கருகில் கடற்கரை திக்கில் முன்னேறி, ரோமலின், படையும் ஆர்னிமின் படையும் ஒன்று சேராதபடி செய்வதே நேசத்துருப்புகளின் கருத்து. ஆனல் அவ்வெண்ணம் ஈடேறுமென்ற நம்பிக்கை இப்போது மிக்கக் குறைந்துவிட்டதாக ராய்ட்டரின் விசேஷ நிருபர் தெரிவிக்கிறார். ரோமலின் படையைத் துரத்திக் கொண்டுவந்த ஜெனரல் மாண்ட்கோமரியின் படை டிரிபோலிடானிய எல்லையைக் கடந்து டியுனிஸியாவுக்குள் பிரவேசித்துவிட்டது.

தென் மேற்கு பஸிபிக்

ஜப்பானியர் ஸாலமன் தீவுகளில் ஒன்றான குடால் கனைரைக் காலி செய்து விட்டனர். நியுகினியிலுள்ள பியுனவிலிருந்தும் ஜப்பானியர் வெளியேறி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. நேசக் கட்சிக்கு இது ஒரு வெற்றி தான். ஆனல் இறுதி வெற்றி பெறு முன் அக் கட்சி பல கடும் போராட்டங்கள் நடத்தியாக வேண்டும். ஸாலமனுக்குத் தெற்கே பெரிய கடல்-விமானப் போர் நிகழக் கூடுமென்று தெரிகிறது.

சர்ச்சில் லண்டன் திரும்பினர்

சர்ச்சில் துருக்கியில் ஜனதிபதி இனேனு முதலியவர்களுடன் சம்பாஷித்தார். அச் சம்பாஷணை விபரத்தை துருக்கி அதிகாரிகள் ஜெர்மன் ஸ்தானிகரிடம் தெரிவித்தனர். இதன் பேரில் அந்த ஸ்தானிகர் தனது சர்க்காருடன் கலந்துபேச பெர்லினுக்குச் சென்றிருக்கிறார். சர்ச்சில் ஸைப்ரஸுக்கும், மீண்டும் கெய்ரோவுக்கும் சென்று அங்கிருந்து இங்கிலாந்து போய் சேர்ந்தார்.

* * * *

தீவிர ஸப்மரீன் போருக்கு ஏற்பாடு

ஜெர்மனி தினம் ஒரு சப்மரீன் தயாரிக்கிறது. அந்த சப்மரீன்கள் மூழ்கடிக்கப்படுவதைவிட உற்பத்தி வேகம் அதிகம். ஹிட்லரின் கப்பல்படைத் தலைவராக அட்மிரல் கார்ள் டொயனிட்ஸ் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஸப்மரீன் போரை மிகத் தீவிரமாக நடத்த ஜெர்மானியர் திட்டஞ் செய்திருப்பதை இது ருஜூப்படுத்துகிறது என்று 'நியூயார்க் டைம்ஸ்' இன்று கூறுகிறது. மேலும் அப்பத்திரிகை கூறுவதாவது:—எதிரிகள் ஜயமடைவதற்கு சப்மரீன்கள் அளிக்கும் உதவியில்தான் அவர்களுக்குக் கடைசி நம்பிக்கை என்ற உண்மையை நாம் கவனிக்கவேண்டும். கப்பல்களையும் மாலுமிகளையும் நாசஞ் செய்ய அட்மிரல் டொய்னிட்ஸ் முயற்சிப்பார். ஆதலால் அபரிமிதமான கப்பல்கள் நாசமடைவதுமட்டுமல்லாமல் மாலுமிகள் பலர் இறந்து போவார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கலாம். ஆயினும் ஸப்மரீன்களை நாம் தொலைக்க முடியும். நமது பாதுகாப்பு முறைகளை அபிவிருத்தி செய்து, போதிய பாராக் கப்பல்களை தயாரித்து, சரக்கு ஏற்றுமதிக் கப்பல்களின் வேகத்தை அதிகரிக்கவும் வேண்டும்.

* * * *

ஸியானேவுக்குச் சீட்டு

இத்தாலிய மந்திரி சபையில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. முஸோலினி அந்நிய மந்திரி பதவியைஏற்றுக்கொண்டிருக்கிறார். இதுவரை அந்நிய மந்திரியாக இருந்து வந்த ஸியானே பிரபு 3 வருஷ காலத்திற்கு பாஸிஸ்ட் கிராண்டு கவுன்ஸிலின் மெம்பராக் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

* * * *

சர்ச்சில்-ரூஸ்வல்ட் திட்டம்

"முதலில் ஜெர்மனியை முறியடிப்பது, பிறகு ஜப்பானைத் தோற்கடிப்பது" இது தான் சர்ச்சில்—ரூஸ்வல்ட் சம்பாஷணை மூலம் செய்யப்பட்ட முடிவு என ஆஸ்திரேலியப் பிரதிநிதிகள் சபையில் பிரதம மந்திரி மிஸ்டர் கர்டின் வெளியிட்டார்.

* * * *

ஸ்பெயினுக்குள் நாஸிப்படை புகுமா ?

ஸ்பானிய எல்லையில் ஏராளமான ஜெர்மன் துருப்புகள் திரண்டிருக்கின்றன; அவை ஸ்பெயின் வழியாகச்சென்று மத்தியதரைக் கடலோரமாயுள்ள ஸ்பானியக் கடல் கரையை ஆக்கிரமிக்க இடந்தர வேண்டுமென்று ஜெர்மன் சர்க்கார் ஸ்பெயினுக்கு இறுதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்று ஸ்டாக்ஹாமிலிருந்து ஒரு செய்தி வந்தது. ஸ்பானிய சர்க்கார் அதை அடியோடு மறுத்துவிட்டனர்.

* * * *

பிரஸிடென்ஸி காலேஜ் தினம்



சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தினக் கொண்டாட்டம் சென்ற வாரம் மிஸ்டர் டி. ஆஸ்டின தலைமையில் நடந்தது.

3

கூண்டுக் கிளி

*

வ. வேணுகோபாலன்

மாலைக் காலம். வெயிலின் வெம்மை தணிந்து விட்டது. சூரியனின் ஒளி மங்கவில்லை. குளிர்ந்த தென்றற் காற்று வீசியது. காவிரிச் சங்கமத்திற்குச் செல்லும் சாலையில் கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் போய்க் கொண்டிருந்தனர். சாலையின் இரு புறங்களிலும் பெரிய கடைகள் இருந்தன. தமிழ் வணிகர்களும் அயல் நாட்டு வணிகர்களும் வியாபாரம் செய்திருந்தனர். சாவகர், சீனர், யவனர், துருக்கர் முதலியோர் மிகுதியாக இருந்தனர். விந்த மலையிலிருந்து கொணர்ந்த யானைத் தந்தம், பொதிய மலைச் சந்தனம், இலங்கை ஈழத்துச் செப்பு, மேல் கடற் பிறந்த கொடிப் பவளம், வடமலைப் பொன், கொற்கைத் துறை முத்தம், விஞ்சையம் பெரு மலையின் வெள்ளி, இமயத்து வயிரம், கடாரத்து இரும்பு, முதலிய பொருள்களை விற்றுக் கொண்டிருந்தனர். யவனத் தச்சர், அவந்தி தேசத்துக் கொல்லர், மகத தேசத்து மணிகள் விற்போர், பாடலிபுரத்து பொற் கொல்லர், கோசல தேசத்து சித்திரக்காரர் முதலியோர் அங்கங்கே, நின்ற வண்ணமும் இருந்த வண்ணமுமாக விலையுயர்ந்த பொருள்களை விற்றுக் கொண்டிருந்தனர். தமிழ் மக்கள் ஆவலோடு அப்பொருள்களை வாங்கிக்கொண்டிருந்தனர்.

பளிங்குக் கிளி

அவ்விடத்தில் யவனத் தச்சன் ஒருவன், சில பிரதிமைகளை விற்றுக் கொண்டிருந்தான். யவனத் தச்சர்களின் கலைத் திறமையைக் காட்டும் பிரதிமைகள் அவை. பெருஞ் செல்வர்களாகிய வணிகர்களே அவற்றை விலை கொடுத்து வாங்க முடியும். திருவிழாக் காலங்களில் தான் அத்தகைய பிரதிமைகள் அதிகம் விற்கப் பெறும். பொன்னிலும், பவளத்தாலும், வயிரத்தாலும், விலையுயர்ந்த கற்களாலும் வேலைப்பாடு செய்த பிரதிமைகள். அவற்றிற்குத் தக்க விலை கொடுத்து வாங்க இயலாத, ஆடவரும் மகளிரும், அப்புறம் செல்ல மாட்டாமல், ஏக்கமுடன் கண்ணால் கண்டு நின்றனர். அப்போது சரேலெனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ஒரு யுவகன் அங்கே தோன்றினன். அவன் வருகையைக்கண்டு சிலர் விலகி நின்றனர். வியப்புடன் அவனுடைய முரட்டுத் தனத்தைக் கண்டு நின்றனர் சிலர். அவனைக் கண்டவுடன் எழுந்து மரியாதை செய்தான் யவனத் தச்சன். அதைக் கண்டு அங்கிருந்தவர்கள் வியப்புற்றது ஆச்சரியம் தான். யுவகனைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? நகரத்திற்குத் திரு விழாப் பார்க்கப் புதிதாக வந்தவர்கள் எவ்வாறு அவனைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்? யுவகனுக்குப் பின்னே நின்ற குதிரை மிக வேகமாகப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தது. வாயின் இரு புறங்களிலும் நுரை ததும்பியிருந்தது. அதனால், யுவகன், குதிரையில் மிக வேகமாக வந்திருக்கிறன் ஏதோ அவசர காரியத்திற்காக அவ்விடம் வந்திருக்கிறன் என்று சிலர் ஊகித்தனர். காரணம் தோன்றாமல் அவன் முகத்தையும், குதிரையையும் உற்று உற்றுப் பார்த்தனர் சிலர். புன் சிரிப்புடன், பொறுமையுடன், அங்கிருந்த பிரதிமைகள் ஒவ்வொன்றையும் எடுத்துப் பார்த்தான் யுவகன். பளிங்குக் கூண்டில் பச்சை நிறக் கிளிப் பிரதிமை ஒன்று வைக்கப் பெற்றிருந்தது. யுவகன் மனத்தை அது கவர்ந்தது. அதைக் கையில் எடுத்து நீண்ட நேரம் அழகு பார்த்தான். சற்று பெருமிதத்தோடு, "இது எதனுல் செய்யப் பெற்றது" என்றான்.

யவனத் தச்சன் பரிசு

"ஸத்துகரே, இந்தக் கூண்டு பளிங்குக் கற்களால் செய்யப்பட்டது. உயர்ந்த பச்சைக் கற்களால் இக்கிளி செய்யப்பட்டது. இதன் மூக்கும், கண்களும், கழுத்தின் கோடுகளும் பவளத்தாலும் வயிரத்தாலும் செய்யப்பட்டது. இதன் கால்கள் பொன்னுல் இயன்றவை; தொடுவதற்குப் பஞ்சு போல் மேன்மையுடையதாய் இருக்கும்"

"அப்படியா? இதற்கு உயிர் இல்லாதது ஒன்று தான் குறை.



"என் ஞாபகமாக இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்" என்றாள் பத்திரை.

யவனர்களின் கலைத் திறமையைக் காட்டுவதற்கு இந்தக் கிளி ஒன்றே போதும். ஆனால் இதன் விலை என்ன?"

"இரு நூறு பொன்கள் மதிப்பு. தங்களுக்கு இதைப் பெற ஆவல் உண்டோ?"

"ஆம். ஏன்? உள்ள விலையைக் கொடுத்துவிடுகிறேன்.

"வேண்டாம் நான் விலை கூறியது தங்களுக்கு அல்ல, தங்களிடம் இதை விலைக்குக் கொடுக்க, அவ்வளவு அறிவில்லாதவனா நான்? இந்தப் பட்டினத்தில் தாங்கள் விரும்பும் எந்தப் பொருளையும் விலை கொடுத்து வாங்கவேண்டுமா? தாங்கள் விரும்பிய இந்தக் கிளியை, ஆயிரங்கோடி பொன் கொடுத்தாலும் பிறருக்குக் கொடேன். என் ஞாபகத்துக்கு அறிகுறியாக இந்தக் கிளியைக் கூண்டுடன் தங்களுக்குக் கொடுக்கிறேன் என்று அதை எடுத்துத் தந்தான் யவனத் தச்சன்.

வணிகர் வீதியில் பத்திரையைக் காதலித்த இளைஞன்தான், அந்த யுவகன்; அவனுக்கு ஸத்துகன் என்பதுதான் பெயர். பத்திரையைக் கண்டது முதல் ஆராக் காதல்கொண்டு அவளை காணலாம் என்னும் ஆசையுடன் அன்று வந்தான். வழியில் அந்த யவனத்தச்சனைக் கண்டான். ஸத்துகனுக்கு அவன் நண்பன். அது மட்டும் அல்ல. ஸத்துகனிடம் யவனத் தச்சனுக்கு, பயமும் மதிப்பும் உண்டு. அந்த யவனத் தச்சன் மட்டும் அல்ல; அயல் நாட்டிலிருந்து வாணிபம் செய்யவந்த வணிகர் யாவரும் அந்நகரில் உள்ள வணிகர்களில் பலரும் அவனிடம் அச்சமுடையவர்கள். அவன் விருப்பத்திற்கு மாறாக நடவார். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. பெரும் புரட்சிக்காரன் அவன் என்று சொல்லலாம். அஞ்சாத நெஞ்சம் உடையவன். அச்சம் என்பதையே அறியாதவன். தான் எண்ணியதையும் சொல்லியதையும் உடனுக்குடன் செய்து காட்டும் பிடிவாதம் உடையவன். அஞ்சாமல் எக்காரியத்தையும் துணிந்து செய்யும் வீரர் பலர் அவனுக்கு அடங்கியிருந்தனர். அவன் ஏவிய காரியத்தை சொல்லு முன் செய்துமுடிக்கும் தோழர் சிலர் இருந்தனர். அதிகம் கூறுவானேன். தன்னோடு பழகியவர்களை எவ்வாறேனும் தன் வசம் ஆக்கிவிடுவான். மீறியவர்களை அச்சமுறுத்திக்காரியங்களைச் சாதித்துக்கொள்வான். தவிர, பெருஞ் செல்வம் படைத்த வணிகனின் புதல்வன் அவன். அத்தகைய அவன் விருப்பத்திற்கு மாறாக யவனத் தச்சன் செய்வானா? சிறிதும் கவலையின்றி இருநூறு பொன் பெறுமானமுள்ள கிளியை அவனிடம் தந்துவிட்டான். கிளியை அவன் மதிக்கவில்லை. ஸத்துகனைத்தான் மதித்தான். 'அவனுக்கும் தனக்கும் உள்ள நட்பு பங்கப்படாதவாறு பாதுகாத்துக்கொண்டான்.

கூட்டத்தினர் வியப்பு

'இரு நூறு பொன் பெறுமானமுள்ள கிளியை 'ஸத்துகனுக்கு, யவனத் தச்சன் கொடுத்துவிட்டானே' என்று அங்கிருந்தவர் ஆச்சரியம் அடைந்தனர். ஸத்துகனை நோக்கும் ஒவ்வொரு நிமிஷமும் 'அவர்களுக்கு வியப்பு அதிகரித்துக்கொண்டே இருந்தது. அன்று அந்தக் கிளியை அவன் கொடுக்காவிட்டால், மறுநாள், அந்த யவனத் தச்சன் அங்கு இருக்க முடியுமா? அதைப்பற்றி அங்கிருந்தவர்களுக்கு என்ன தெரியும்? ஸத்துகனின் புன்னகையையும் பரந்த மார்பத்தையும், பெருத்த தோள்களையும் கண்டு கூட்டத்தினர் வியப்புடன் நின்றனர்.

அந்த வழியே ஒரு சிவிகை அப்போது சென்றது. காற்றின் வேகத்தால், பல்லக்கின் திரை சிறிது விலகியது. உள்ளே இருந்த யுவதி— பத்திரை சிறிது முகத்தை நீட்டிப் பார்த்தாள். ஸத்துகன் பார்வையும் அப்போது எதிரே நோக்கின. சிவிகை செல்லும் வேகத்தில் ஒருவருக்கொருவர் நன்றாகப் பார்த்துக்கொள்ள முடியுமா?

"நல்லது, நான் போய் வருகிறேன். இந்தக் கிளி எனக்கு இன்பத்தைத்தரும் என்று எண்ணுகிறேன்" என்று கூறிவிட்டு கிளியை எடுத்துக்கொண்டு குதிரைமீது தாவி உட்கார்ந்தான். அப்படியே சிறிது நேரம் சிவிகை சென்ற திசையை நோக்கலானான்.

காமன் கோட்டத்தில்

'இவனிடம் இவ்வளவு பயமா? இரு நூறு பொன்பெறுமானமுள்ள கிளியை, இரக்கமின்றி, விலை கொடுக்காமல் எடுத்துச் செல்லும் இவன் யார்?' என்று வெறுப்பும், வியப்பும் அடைந்தனர் கூட இருந்தவர்கள். முகத்தில் வெறுப்புக் குறி தோன்ற சிலர் பார்த்தனர். ஸத்துகன் அவர்களை லட்சியமே செய்யவில்லை. அவன் கொள்கைகளுக்குக் வழிகாட்டியாக, அவன் கருதிய புத்த தேவனுக்கு அன்றி வேறு யாருக்குப் பயப்படுவான்?

கடிவாளத்தை இழுத்துப் பிடித்தான். குதிரை அம்பைப் போல் விரைந்து சென்றது. காமன் கோட்டத்திற்குச் செல்லும் சாலை வழியே தான் சென்றது. முன்னே சென்ற பல்லக்கை முந்தியது ஸத்துகன் குதிரை. சிறிது நேரத்தில், சிவிகையும், காமன் கோட்டத்தை அடைந்தது. காமன் கோட்டத்திற்கு அருகில் குதிரையை நிறுத்திவிட்டு ஒரு மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு இளைப்பாறி இருந்தான் ஸத்துகன். மந்த மாருதம் மணந்து வீசுகின்ற மாலைக் காலத்தில் அவளை நினைந்து உள்ளம் உருகினான்.

வழக்கம் போல் காமன் கோட்டத்திற்கு அருகில் உள்ள சோலையில், இறங்கியது சிவிகை. கருப்புத்திரையால், முன்போல் கூடாரம் போடப் பெற்றது. யுவகனைக்கண்டு குலாவ வேண்டுமென்று துடித்தது பத்திரையின் உள்ளம். முதல் நாள் இரவும், சிவிகையில் வரும்பொழுதும் தன் எண்ணத்தை மாற்றும் முறையில் வசந்தி பேசியதை எண்ணி வருந்தியிருந்தாள். 'என்னுடைய நெஞ்சமே எனக்குத் துணை. அல்லாமல், வேறு யார், என் துன்பத்திற்குத் துணை செய்பவர்?' என்று ஆறுதலடைந்தாள். "வசந்தி; என்னுடைய காதல் மாசற்றது. ஆதலால் அந்த யுவகனை அன்றி வேறு யாரையும் மனத்தாலும் நினையேன். இது உண்மை. போதிநாதன் (புத்தன்) அருள் புரிவான்" என்றாள். "உன் விருப்பம் போல் நடக்க வேண்டும் என்றே நானும் வேண்டுகிறேன்; என்றாள் வசந்தி. பத்திரை எழுந்து கூடாரத்தின் ஒரு புறத்துத் திரையை அகற்றிவிட்டு பிரமிப்புடன் நின்றாள். அவள், யாரைக் காணும் ஆவலுடன் திரையை அகற்றினாளோ, அவரைக் கண்டாள். கூடாரத்திற்குச் சற்று தூரத்தில் நேராக இருந்த மஞ்சத்தில் அமர்ந்திருந்தான் யுவகன்-ஸத்துகன். "தந்த தெய்வம் தந்தது" என்று உவகை மிகுதியால் கூறினாள் பத்திரை. வியப்பாக இருந்தது வசந்திக்கு.

பத்திரை கண்ட காட்சி

"இதோ பார், அவர் வடிவத்தை. சுருண்ட தலைமயிர், உயர்ந்த தோளில் விழுந்து புரள்கின்றது. கூரிய மூக்கும், விசாலமான நெற்றியும், பரந்த அறிவுள்ளவர் அவர் என்பதைத் தெரிவிக்கின்றன. அவரது ஆழ்ந்த பார்வையில் பார்ப்பவரைக் கவரும் ஒளி இருக்கிறது. பரந்த மார்பமும், உயர்ந்து திரண்ட தோள்களும், போரில் பின்னடையாத வீரர் என்பதைப் புலப்படுத்துகின்றன. முழந்தாள் வரையில் நீண்டிருக்கின்றன அவரது கைகள்; அதனால் அவர் அரச குலத்து உதித்தவரோ என்று எண்ணுகிறேன். உயர்குலத்து உதித்த உத்தமர் அவர் என்பதில் ஐயமில்லை. இவ்வளவு அழகுடைய இவர் நல்லொழுக்கத்தால் மேன்மை தங்கியவர் என்பதைக் கூறவும் வேண்டுமா? அவரை நான் அடைந்தால் அது என் பாக்கியமல்லவா?"

"அழகும் அறிவும் மிக்க உன்னை, அவர் காதலித்தால் அது தகுதியே; குறை, எதுவும் இல்லை; ஆனால்..."

"என்ன சொல்கிறாய்?"

"அவரைப்பற்றி கூறியவை யாவும் பொருத்தமுள்ளதே. அழகு மிக்கவர் அவர் என்பதும் உண்மையே; ஆனால், அதைக்கொண்டு ஒழுக்கத்தை முடிவு செய்து சொல்லுதல் சரியல்ல."

"நீதான், சாமுத்திரிகா லக்ஷணம் அறிந்தவளாயிற்றே! இவரைப்பற்றி என்ன தோற்றுகிறது?"

"உன்னை விட எனக்கு அதிகம் தெரியாது. அழகும், சீலமும், ஒத்துக்கொள்வது அபூர்வம் என்பதுதான் என் முடிவு. ஆனால் இவரைக் குறிப்பிட்டுக் கூறவில்லை. சிலர், அந்த முடிவுக்குப் புறம்பாகவும் இருப்பார்கள். யார் அதை உள்ளபடி அறிய முடியும்? நமக்குக் கல்வி பயிற்றிய ஆசிரியரே அவ்வாறு கூறியிருக்கிறாரே!"

வேட்கையை மறைக்க முடியுமா?

"அப்படியானால் இவரிடமும் அந்தக் குறை இருப்பதாகச் சொல்லுகிறாயா? அல்லது, பொதுவாக அழகுள்ள ஆட்வர்களைப்பற்றிச் சொல்லுகிறாயா?" பத்திரை இவ்வாறு கிளறிக் கேட்பதற்கு வசந்தி எவ்வாறு மறுமொழி கூறுவாள். "இவரைக் குறித்துச் சொல்லவில்லை" என்றாள். "எவ்விதம் இருந்தாலும் என்ன நேர்ந்தாலும் என் உள்ளம் அவரை விட்டு மீளாது. எல்லாம் அவரவர் ஊழ்வினையின் படி நிகழும். அவரை நினைக்கும் போதும், காணும் போதும் என் உள்ளம் களிக்கின்றது."

"உனக்குத் தோன்றிய வேட்கையை நினைக்கும் போது எனக்கு வியப்பாகவே இருக்கிறது. காதல் உள்ளத்தின் தன்மையை யார்தாம் அறிவார்?"

"வசந்தி, வேட்கை என்பது நம்மைக் கேட்டுக்கொண்டு தோன்றுவதல்ல. தோன்றும் வேட்கையை மறைக்கவும் முடியாது. நமக்குத் தும்மல் வரும் பொழுது கேட்டுக்கொண்டா வருகிறது? தானே அல்லவா தோன்றி விடுகிறது? அதைத் தடுக்க முடியுமா? அதுபோலத்தான்."

"ஆம் உண்மைதான்" என்று புன்னகையோடு கூறினாள் வசந்தி.

இவர்கள் பேசிக்கொள்வதை இன்னதென்று அறிய முடியாமற் போனாலும், ஏதோ பேசுகிறார்கள் என்பதை மட்டும் அறிந்தான், யுவகன்—ஸத்துகன். இவர்களின் வடிவத்தைப் பார்த்தும் பார்க்காததுமாக உட்கார்ந்திருந்தான். 'யுவதியோடு எவ்வாறு பேசுவது? இன்று எவ்வாறேனும் இவளுடன் வார்த்தையாடி, என் வசம் ஆக்குவேன்' என்று ஆலோசித்து மஞ்சத்தில் அமர்ந்திருந்தான். 'வலியசென்று அவர் யார்? என்பதை அறிந்து கொள்ளலாமா? அவருடன் பேசுவதில் தவறு என்ன? என்னிடம் அவருக்கு விருப்பம் உண்டு என்பதை அவர் கண்களின் நோக்கத்தால் அறிந்து கொண்டேன். இனி அவரோடு பேசுவதால் தவறு எதுவும் இல்லை, என்று பத்திரை முடிவு செய்தாள். அப்போது அவள் கண்களுக்கு யுவகனுக்கு அருகில் மஞ்சத்தில் வைக்கப்பெற்றிருந்த பளிங்குக் கூண்டில் உள்ள கிளி புலப்பட்டது. உடனே ஓர் எண்ணம் அவளுக்கு உண்டாயிற்று. 'கிளி, காரணமாக அவரோடு பேசலாம்' என்பதுதான். "வசந்தி, அவருக்கு அருகில் இருக்கும் கிளியைப் பார்த்தாயா? அழகுள்ள அந்தக் கிளியை, விலை கொடுத்து நாம் பெற்றுக்கொள்வோமா?" என்றாள்.

வசந்தியின் தூது

"நான், சென்று கேட்டு வருகிறேன். நீ இங்கேயே இரு" என்று கூறிப் புன்னகையோடு சென்றாள் வசந்தி. அவர் என்ன

(16-ம் பக்கம்)

தாசிப் பெண்

சிறு கதை

★

வித்துவான் தே. வீரராகவன் எழுதியது

"இளவரசருக்கு ஜே! தாராவுக்கு ஜே!" என்ற வாழ்த்தொலிகள் வானைப் பிளந்தன.

சமுத்திரமே நடந்து வருவது போன்று டில்லி நகரின் ராஜ வீதியில் அன்று மாலை ஒரு பெருங்கூட்டம் அசைந்து செல்கிறது. கடலில் எழும் அலைகள் போன்று அம்பாரி தாங்கிய யானைகளும், வானில் சிதறியோடும் மேகங்கள் போன்று வான வீதியில் உலவும் பல வர்ணக்கொடிகளும், மாலைக் கதிரவனின் ஒளிபட்டு மின் வெட்டுப்போல் திருப்பும்பொழுதெல்லாம் விட்டு விட்டுச் சுடரும் ஈட்டிகளும் பாதி மூழ்கிய முகத்துடன் கடலில் தவழ்ந்து காட்சி தரும் அர்த்த சந்திரர்களை ஒத்த வெண் குடைகளும் இந்த ஜன சமுத்திரத்தின் தோற்றத்தை அழகு படுத்துகின்றன. இச்சமுத்திரத்தை அடக்கி நடத்துவதற்கென்றே ஏற்படுத்தப்பட்டவை போன்று நால்வகைப் படைகளும் இந்தக் கூட்டத்தின் முன் சென்றன. ஊர் முழுதும், தெருக்கள் தோறும், வீடு ஒவ்வொன்றிலும் வெற்றிடமில்லாமல் அலங்கார தேவதை நடனமாடிக்கொண்டிருந்தது. படைப்புக் காலம் தொடங்கி, அன்று தான் பூமி தேவி புன்னகை பூத்திருக்க வேண்டும் என்று யாரும் எளிதில் டில்லி நகரத்தின் தோற்றத்திலிருந்து சொல்லி விடலாம்.

மேற்சொன்ன ஜனக்கடலின் நடுவில் ஓர் அற்புதக் காட்சி. அன்று பாற்கடலில் மிதந்த மந்தர மலை போன்று எல்லா யானைகளிலும் பெரிய யானையொன்று தன் பெருமைக்குத் தகுந்த மாதிரி கம்பீரமாக நடந்து வருகிறது. கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தெனும்படி ஜோடனை செய்யப்பெற்றது. அதன் மீது நவரத்ன கசிதமான அம்பாரி ஒன்று இளஞ் சூரியர்கள் பலர் ஒன்று கூடியது போன்று ஜாஜ்வல்யமாய்ப் பிரகாசிக்கிறது. அதன் மத்தியில் ஒரு கட்டழகன்- இவ்வளவு ஆடம்பரத்துக்கும் காரணமானவனென்று சொல்ல வேண்டியதில்லை-இளமைக்கு வார்ஸாக வந்தவன். அழகுக்கு அழகு செய்யும் ஆபரணம் போல் அமர்ந்திருந்தான்- அன்று மாலை அவன்மீது சொரியப்பட்ட மலர்களால் அவன் உடலின் பெரும் பகுதி மூடப்பட்டிருந்தது. மார்பும் முகமுமே கண்களுக்கு இலக்காயின.

அவன் தான் மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹானின் மகன் தாரா.

சரி! இந்தக் கொண்டாட்டம் எதற்கு? அன்று காலையில்தான் சக்ரவர்த்தி ஷாஜஹான் தனக்குப் பின்னால் பட்டத்துக்கு வர வேண்டிய வார்ஸாக இளவரசன் தாராவை நியமித்துப் பிரகடனமும் செய்தான். அதன் பயனாய் மக்கள் உள்ளத்தில் பொங்கி யெழுந்த மகிழ்ச்சிதான் இவ்விதமாகப் பெருக்கெடுத்து டெல்லி மா நகரில் ஓடுகிறது.

* * * *

இளவரசர் ஊர்வலம் வருஞ் செய்தி, பறை மூலம் நகரத்தாருக்கு அறிவிக்கப்பட்டது தான் தாமதம், நீலா தன் மாளிகையை அலங்காரம் செய்தாள். அவள் ரஸபாவத்தைக் காட்ட அந்த அலங்காரம் அளவு கோலாய்த் திகழ்ந்தது. மாளிகையை அலங்காரம் செய்த பின்னர் தன்னையும் அலங்காரம் செய்து கொண்டாள். இல்லை-இல்லை-மதனனும் கலங்கும் வனமோகினியாக தன்னைக் சிருஷ்டித்துக் கொண்டாள். எங்கிருந்து தான் எப்படிச் சம்பாதித்தாளோ, அப்படிப்பட்ட மிருதுவான சுகந்த மலர்களை அவற்றை ஒரு தங்கத் தட்டில் எடுத்துக் கொண்டு ஓப்பனை செய்யப்பட்டிருந்த தன் மாளிகையின் மாடித் தாழ்வாரத்துக்கு வந்து நின்று கொண்டாள். உடல் தாழ்வாரத்தில் உலவினாலும், உயிர் இளவரசன் வருமிடத்துக்குத் தாவிச் சென்று விட்டது. ஊர்வலம் எங்கே வருகிறது? சப்தம் மட்டில் தான் கேட்கிறது. ஊர்வலம் [illegible]ாள். [illegible] என்னிடுக்கெதிரே வர [illegible]ன்பது எனக்கை யாகலாம் அதனாலே தான் உள்ளே [illegible]வரை அந்தப் பேச்சை சென்றுவில்லை. ஆயினும் அவன் வெட்டை விட்டுப் புறப்பட்டுச் என்ன்று நீண்ட காலம் ஆகி விட்டது. இன்னமும் அவனை அங்கே தாட்டு வைத்திருந்தால் நன்றாக இராது. அவ்விதம் செய்தால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என் மீது அடாப் பழியைச் சுமத்துவார்கள்"-இவ்விதம் சொன்னாள் சோபாராணி.

"ஆகவே, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுடைய வாய்க்குப் பயந்து தானே, அமலனைத் திரும்பி அழைத்து வர வேண்டும் என்று இப்போது சொல்லுகிறாய்?"

சோபாராணியின் மனது அனல் மீது இட்ட மெழுகு போல உருகிக் கிடந்தது. அவளுடைய தத்தளிப்பில் இந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று அவளுக்குச்சட்டென்று தோன்றவில்லை. அவள் கண்களில் நீர் நிரம்பிக் கிடந்தது. அவள் பேசாமல் தலை குனிந்து கொண்டாள்.

அதைப் பார்த்த ஹரகண்ட பாபு, "சரி, இந்த விஷயமாக

கடந்து விட்டதும், இளவரசன் ஏறியிருந்த பட்டத்து யானை மாளிகையின் முன் நிற்பதும் கூட, திறந்த அவள் கண்களில் படவில்லை. அம்பாரியினுள்ளிருந்த அரசிளங்காளையின் கண்ணம்புகள் மார்பில் பாய்ந்த போதுதான் அவளுக்கு ப்ரக்ஞை உண்டாயிற்று. உடனே தட்டிலிருந்த மலர்களை எடுத்து வெகு நாசுக்காக இளவரசன் மீது சொரிந்தாள். கூடவே தன் நீலக்கயல்விழி மலரையும் அவன்மீது வீசினாள். பதிலுக்குக் காதல் பீரிடும் தன் செந்தாமரைக் கண்கள் பார்வையில் தாரா அவளுக்கு நன்றி செலுத்தினான். இருவர் கண்களும் ஒரு விநாடி நேரம் தம்முள் உறைந்து கொண்டன. இந்த நயனப் புணர்ச்சியின் மர்மத்தை இளங்காதலர்களே உணர்வார்கள்.

* * * *

கூட்டத்தில், லோபாவில் ஐபார் தொங்கப் போட்ட முகத்துடன் ஆழ்ந்த சிந்தனையில் அமர்ந்திருந்தான். "என்ன ஐபார்! ஊர்வலத்தைக் காணவில்லையா?

"உன் நடனத்தின் ஓர் அசைவில் காணும் இன்பத்தில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட அதில் இல்லையே.........இதோ.......... அரச சபையிலிருந்து அலுத்து வந்திருக்கிறேன். கொஞ்சம் நாட்டியம் நடக்கட்டும். என் மனம் இன்று ஏனோ குழம்பியிருக்கிறது."

"மற்றவர்களும் வந்துவிடட்டும்."

"எனக்காக இல்லாவிட்டாலும், மொகலாய சக்ர்வர்த்தி ஷாஜஹானின் அந்தரங்கச் சிநேகிதனை மகிழ்விக்கும் பொறுமைச் சரிவரக் கவனிப்பதில்லை என்ற ஏதோ ஒரு வதந்தியைத் தான் கேள்விப்பட்டதாகச் சொல்லி விட்டு மேலே எப்படி நடக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அவருக்குப் புத்திமதி கூறவும துணிந்து விட்டான்.

"அமலனை பள்ளிகூடத்துக்கு அனுப்பும் வயது வந்து விட்டது. அவனுடைய போஷணையை உங்கள் வீட்டு வேலைக்காரியின் கையில் ஒப்படைப்பதை விட அவனை 'போர்டிங் ஸ்கூலு'க்கு அனுப்புவதே நலம் என்று நான் நினைக்கிறேன். அதனால் நவராத்திரி (பூஜா) விடுமுறை கழிந்ததும் அவனை போல்பூருக்கு அனுப்புவது என்று தீர்மானித்திருக்கிறேன். உங்களுக்கு அதில் எந்த ஆக்ஷேபனையும் இருப்பதற்கில்லை" என்று கடிதத்தை முடித்திருந்தான் மாப்பிள்ளை.

ஹரகண்டபாபு கடிதங்களைப் பார்த்து வெறுப்படைந்து அவற்றை சோபாராணியின் பக்கமாக, வீசி யெறிந்துவிட்டு மௌனமாக இருந்தார். அவளும் ஒருதரத்துக்கு அதிகமாகவே அவற்றைப் படித்துப் பார்த்தாள்; அவளுடைய புருவங்கள் சுருங்கிவிட்டன. அவளைப்பற்றி யார் என்ன கூறினாலும் பாதகமில்லை. ஆனால் அவளுடைய கணவரைப்பற்றி

நாற்காலியில். ஏனென்று கேட்பாரில்லை. நேரமாகவே, டெல்லி நகரின் வீதிகளில் மனித நடமாட்டமும் சுருங்கியது. திருடன் மாதிரி ஐபார் நடந்தான் வீட்டை நோக்கி.

நீலாவுக்கு ஏனோ அன்று இரவு ஆகாரம் செல்லவில்லை. படுக்கையில் படுத்துக்கொண்டாள். நல்ல பஞ்சனை மெத்தைதான். ஆனாலும் தூக்கம் வரவில்லை. இப்படியும் அப்படியும் புரண்டாள். பலனில்லை. இன்னதென்று விவரிக்க முடியாத ஒரு மனவேதனை. மனத்தின்மீது மலையை வைத்தமாதிரி, மனதில் ஒரு பெரிய பாரம். திணறுகிறாள். அவள் வேதனையைப் பறிமாறிக்கொள்ள கொடிய நிலவுதானிருந்தது. மணி ஒவ்வொன்றாகக் கழிந்து பதினென்றுக்கு வந்தது. அப்பொழுதும் தூக்கம் வரவில்லை. சுக்லபக்ஷத்துச் சந்திரனும் மறைந்தது. இருட்டு ஆட்சிக்கு வந்தது... நீலாவின் துன்பம் வளர்வதாகும் தருவாயில்......ஹா! ஹா! அந்தகாரத்தில் மின்வெட்டு தோன்றியது போல் அவள் முன் நின்றது ஓர் ஆண் உரு. சாதாரண உடையில்தான் அது காட்சியளித்தது: கண்களை நெறித்துப் புருவங்களை உயர்த்தித் தன்முன் நிற்கும் ஆண் உருவைப் பார்த்தாள். தன் ஹிருதயக் கோயிலில் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட உருவமே தான் அது என்று அறிந்து கொண்டது தான் தாமதம், தான் படுத்திருந்த படுக்கையினின்றும் குதித்து ஓடி "இளவரசே! இளவரசே!" என்று கத்திக் கொண்டே அவனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். ஆனால் இளவரசன் வாயினின்[illegible] வார்த்தையும் வரவில்லை[illegible]ம் அவன் கண்தக்கும்போதும் எதையோ குறிப் பார்ப்பதற் அதன் பொ[illegible] கட்டாயம் வந்து உணர்வர், போவான். அப்போ கம் அ[illegible]நேகமாகக் கௌரி [illegible] நவகௌரங்கனே அவனுடன் கூட வருவார்கள். அவன் இந்த வீட்டுக்கு வந்திருந்த போதிலும் தன் பொழுதைக் கௌரியுடனே நவகௌரங்கனுடனே தான் அந்தக் காலங்களிலும் கழிப்பான். அவன் கடைசியாக வந்த இரண்டு தடவைகளிலும் சோபாராணி அவ்விடம் இல்லை, அவளுடைய பிறந்தகம் சென்றிருந்தாள். அவள் இல்லாமல் இருந்ததை அவர்கள் சிறிதும் மதிக்கவில்லை. சோபாராணி பலராமபூரில் இருந்திருந்தாலும் அது அவர்களுக்கு எந்த மாறுதலையும் உண்டாக்கியிராது. அமலன் முன் போல அவளுடன் நெருங்கிப் பழகுவதே இல்லை. அவளுக்கும் மனத்திலே அவன் மீது ஒரு கோபம் வைராக்கியம் கொண்டிருந்தாள். அதனால் அவளும் அவனைப் பழைய மாதிரி அபிமானத்தை வெளிக்காட்டவில்லை.

ஹரகண்ட பாபு உயிருடன் இருந்த வரையில் அவர் அமலனுடைய செலவுக்கு வேண்டிய பணத்தைக் கிரமமாக அனுப்பி வந்தார். பல சமயங்களில் செலவு மிதமிஞ்சியதாக இருந்தாலும் அவர் அதைக் கண்டு கொள்ளாதவர் போலவே கேட்டபடி அனுப்பி வந்தார். தாம் அனுப்பும் தொகையின் ஒரு பகுதி நவகௌரங்கனுடைய தமயிக்கும் உபயோகப்பட்டு

ஏற்றப்பாட்டு

★

(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)

நாடோடிப் பாட்டுக்களில் பலவகை உண்டு. ஆங்கிலத்தில் 'பாமரர் பாட்டுக்கள்' (Folk-Songs) என்று குறிக்கும் பாடல்களையே நாடோடிப் பாட்டுக்கள் என்று நாம் வழங்குகிறோம். நாடு முழுதும் ஜீவனோடு உலவும் பாடல்கள் அவை. அவற்றை இயற்றியவர் இன்னாரென்று தெரியாது.

தொழிலாளிகள், குடியானவர்கள், வேலை செய்யும் பெண்டிர் முதலியவர்கள் தங்கள் தங்கள் வேலையினால் உண்டாகும் சிரமத்தைப் போக்கிக் கொள்ளப் பாடும் பாட்டுக்கள் ஒருவகை. ஏழை ஜனங்கள் பொங்கல் முதலிய விசேஷ காலங்களில் ஒன்று கூடி விழா அயரும்போது ஆடியும் பாடியும் இசைக்கும் பாடல்கள் ஒரு வகை.

குழந்தைகளைத் தொட்டிலிட்டுத் தாலாட்டி நிலாக் காட்டிச் சோறூட்டித் தலையை ஆட்டித் தோளை வீசச் செய்து விளையாட்டுக் காட்டும் தாய்மார்கள் குழந்தையோடு குழந்தையாகப் பாடும் குழந்தைப் பாட்டுக்கள் ஒருவகை. சிறுமியரும் சிறுவர்களும் தாம் ஆடும் பலவகை விளையாடல்களிடையே பாடும் பாடல்கள் ஒருவகை. எல்லாவகைச் சாதியினரும் தங்கள் குடும்பத்திலே நிகழும் கல்யாணம் முதலிய நிகழ்ச்சிகளிலே சம்பிரதாயமாகப் பாடி வரும் பாடல்கள் ஓர் இனம். இவ்வாறு பலவகைப் பட்டு நிற்கும் இப்பாடல்கள் எல்லாமே புலவர் உலகத்துக்குப் புறம்பாய் இலக்கண வேலிக்கு அருகே வாராமல் நாட்டில் ஓடி உலவிக்கொண்டிருக்கின்றன.

தொழில் செய்வார் பாடல்களில் தலைமை ஸ்தானத்தை வகிப்பது ஏற்றப்பாட்டு.

"ஏற்றப்பாட்டுக்கு எதிர்ப் பாட்டில்லை" என்பது ஒரு பழமொழி. அந்தப் பாட்டைப் போலக் கற்றறிந்த புலவன் பாடுவது அருமையாம்!

ஏற்ற மரம் கிணறு நிறைந்த பிரதேசங்களில் வேளாண்மைக்கு உதவியாக இருக்கும் கருவி. சால் பிடிக்கும் ஆள் ஒருவன் இருப்பான்; மரத்தின் மேல் ஏறி மிதிப்பவர் ஒருவரோ, இருவர் அல்லது மூவரோ இருப்பார்கள். குனிந்து நிமிர்ந்து சால் பிடிப்பவனே பாட்டுப்பாடுவான். அவனுடைய பாட்டிலே காதல் இருக்கும்; ராமாயணம் வரும்; பாரதக் கதை படரும். அந்த ஏற்றப்பாட்டிலக்கியத்திலே வரும் காதற் காட்சி ஒன்றைப் பாருங்கள்.

* * * *

வேலையன் கீழே இருந்து சால் பிடித்து நீர் இறைக்கிறான். சுப்பையன் ஏற்றமரத்தின் மேல் மேலும் கீழும் ஏறி மிதிக்கிறான். சுப்பையன் நெடுந்தூரத்தில் எதையோ காண்கிறான். அந்தக் காட்சி அவனுக்கு ஒருவகையான இன்பத்தை உண்டாக்குகிறது. தன்னுடைய உணர்ச்சியைத் தன் தோழனுக்கு வெளியிட வேண்டுமென்ற விருப்பம் அவனுக்கு எழுகிறது. வேலையனுக்கு அதை பார்க்கமுடியாது. அவன் கீழே யல்லவா இருக்கிறான்? சுப்பையன் சொல்லத் தொடங்குகிறான்.

"வேல் மரப் பாதையிலே—வேலையா", என்று சொல்லி வரும்போது வேலையன் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. அவன் தன் வேலையே கண்ணாக இருப்பவன். பரந்தவெளி முழுதும் தன் பார்வையைத் திரியவிடும் சுப்பையனைப் போன்றவன் அல்ல.

"என்ன, கதை ஆரம்பித்து விட்டாயா? எனக்கு வேலையிலே கண்ணிருக்கு சுப்பையா" என்று அவன் பதில் சொல்கிறான். சுப்பையன் விடவில்லை. வேலையனுடைய கவனத்தை இழுக்க அவனுக்குத் தெரியும். தான் காணும் காட்சி அப்படிச் சுலபமாகப் புறக் கணிக்கக் கூடியது அன்று என்பதை அவன் உணர்கிறான்.

"வேலி ஓரம் போகுது பார்" என்று மேலே அந்தக் காட்சியின் நிலைக் களத்தைச் சித்திரிக்கிறான்.

வேலையனுடைய கவனம் இப்போது திரும்புகிறது. வேலமரப் பாதையும், அந்தப் பாதையின் இருமருங்கும் உள்ள வேலிகளும் அவனுக்குத் தெரிந்தவைகளே! சுப்பையன் கண்ணுக்குப் படும் உருவம் மாடா? மனிதனா? மாடானாலும்சரி, மனிதனானாலும் சரி, பாதையின் நடுவிலே தானே வரவேண்டும்? வேலி ஓரமாக வர நியாயமில்லையே! இப்போது வேலையனுக்கு விளங்குகிறது. பாதையின் ஓரத்திலே மெல்ல மெல்ல நடந்து வருவது நிச்சயமாக ஒரு பெண் உருவந்தான். இந்த எண்ணத்தை உறுதிப் படுத்திக்கொள்ள விரும்புகிறான்.

"வேட்டித்துணி போட்டிருக்கோ?-சுப்பையா" என்று கேட்கிறான். மேல் இருப்பவன் 'ஆம்' என்று சொல்வதை அவன் விரும்பவில்லை. வேலையன் எதை எதிர்பார்த்தானோ அதே பதில் தான் வருகிறது.

"சித்தாடை கட்டிருக்கு—வேலையா" சரி, இப்போது வருகிறது ஒரு பெண், அதிலும் சிற்றாடை கட்டிய இளம் பெண் என்பதை வேலையன் உணர்ந்து கொண்டான். அவன் உள்ளத்திலே நிருமித்துக்கொண்ட வேலமரப் பாதையிலே, வேலி ஓரத்திலே ஒரு பெண்ணுருவத்தை எழுதிக்கொள்ள முயல்கிறான். அந்தப் பெண் யார்? எப்படி இருக்கிறாள்?—இந்தச் சந்தேகங்கள் தொடர்ச்சியாக எழுகின்றன.

"சின்னக்குட்டி போலிருக்கு-சுப்பையா", என்று சொல்கிறான். சிற்றாடை கட்டியவள், சின்னக்குட்டியாகத்தானே இருக்க வேண்டும்? இது பிரமாத ஊகமல்லவே? ஆனாலும் பேச்சுக்கொடுத்துச் சமாசாரம் வருவிக்க வேண்டுமே.



சுப்பையன் இப்போது வருணிக்க ஆரம்பித்து விடுகிறான்.

"கண்ணாடி தோற்குமடா-வேலையா" என்கிறான். அவளுடைய இள மேனியில் வெயில் படும் போது பளபளக்கிறது போலும்!

மேலே சம்பாஷணை வேகமாகப் படர்கிறது.

"கண்ணைப்பறிக்குதோடா-சுப்பையா" என்று வேலையன் கேட்கிறான். அவள் அருகில் வந்து கொண்டிருக்கிறாள். பளபளப்பாகத் தெரிந்த அழகுப் பிழம்பிலே இப்போது தனித் தனியே அவயவங்கள் புலனாகின்றன. அந்தக் கண்ணாடி தோற்கும் உருவத்துக்குக் கிரீடம் சூட்டினது போல விளங்கும் கொண்டை மைபோலக் கறுத்துப் பளிச்சிடுகிறது. அந்தக் கருமையின் நடுவிலே வெள்ளைப் பூ விளக்கமாகத் தெரிகிறது. சுப்பையன் வருணனையைத் தொடர்கிறான்:

"கொண்டையிலே பூவிருக்கு-வேலையா" வேலையன் இப்போது தன் மனத்திலே குறிப்பிட்ட ஒரு பெண் உருவத்தைப் பிரதிஷ்டை செய்துகொண்டான். அவன் தன் காதலுக்கும் பாத்திரமானவளாகத்தான் இருக்கவேண்டுமென்பது அவன் யோசனை. தான் நினைக்கும் அவள்தானா வருபவள் என்ற சந்தேகம் நீங்கினபாடில்லை.

"கொள்ச்சு முடி போட்டிருப்பா-சுப்பையா" என்று அகக் கண்ணால் காணும் காட்சியை அவன் வருணிக்கிறான்.

அவள் வெகு வேகமாக வருகிறாள்.

"காத்தேனவே பறந்து வரா-வேலையா" இவ்வளவு அவசரம் எதற்கு? ஒருகால் தனக்குக் கஞ்சி கொண்டு வரலாமென்று நினைக்கிறான் வேலையன். அவனுடைய அத்தை மகள் ரத்தினந் தான் அவளென்று நிச்சயம் செய்துகொண்டான்.

"கஞ்சி கொண்டு வாராளோடா—சுப்பையா" என்று கேட்கிறான். அவள் கையில் கஞ்சி இல்லை. கதிர் அறுக்கும் அரிவாள் இருக்கிறது.

"கதிரரிவாள் இருக்குதடா" என்று சுப்பையன் சொல்கிறான். வேலையனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"கதிரறுக்கும் காலமல்ல" வே என்கிறான். சுப்பையன் ஒரு சமாதானம் சொல்கிறான்:

"ஆட்டுத்தழை அறுப்பாளடா" என்கிறான்.

உண்மையில், வருகிறவள் தன்னுடைய காதலனைப் பார்க்கத்தான் வருகிறாள். அவன் கண்ணிலேபட ஏதோ ஒரு காரணத்தை மேற்கொண்டு வருகிறாள். வேலையனுக்குப் படபடக்கிறது.

"அண்டையிலே வந்துட்டாளோ?" என்று வேகத்தோடு கேட்கிறான்.

"அன்னம் போல முன்னே வாரா" என்று சுப்பையன் சொன்னதும் அவனுக்கு வேலை ஓடவில்லை. 'வேலையிலே கண்ணிருக்கு' என்று வீரம் பேசினவன் மயங்கி நிற்கிறான். அவன் மனத்தில் இருந்த காதல் வெளிப்பட்டுப் பொங்குகிறது. வருகிறவள் தன் காதலிதானென்பதில் இனிச் சந்தேகமே இல்லை. அவன் பல்லை இளித்துக் கொண்டே, "அவள் என்-அத்தை மகள் ரத்தினம்டா" என்று ரகசியத்தை வெளியிடுகிறான். அந்த ரகசியத்தை நன்றாகத் தானும் அறிந்து கொண்டதை, "அவள் - உரிமையுள்ள புருஷனும் நீ" என்ற வார்த்தைகளால் தெரிவித்துச் சுப்பையனும் மகிழ்கிறான்.

"அடுத்த மாசம் பரிசம் வைப்பேன்" என்று வேலையன் கல்யாண முகூர்த்தத்துக்கு நாள் குறிப்பிட்டுவிடுகிறான். சுப்பையனுக்கு அதுவே கல்யாண அழைப்பாகவும் ஆகிவிடுகிறது போலும்! பாட்டு முழுவதையும் இப்போது பாருங்கள்.

வேலமரப் பாதையிலே - வேலையா
வேலையிலே கண்ணிருக்கு - சுப்பையா
வேலிஓரம் போகுது பார் - வேலையா
வேட்டித்துணி போட்டிருக்கோ - சுப்பையா
சித்தாடை கட்டியிருக்கு - வேலையா
சின்னக்குட்டி போலிருக்கு - சுப்பையா
கண்ணாடி தோற்குமடா - வேலையா
கண்ணைப் பறிக்குதோடா - சுப்பையா
கொண்டையிலே பூவிருக்கு - வேலையா
கொளச்சுமுடி போட்டிருப்பா - சுப்பையா
காத்தேனவே பறந்துவரா - வேலையா
கஞ்சிகொண்டு வாராளோடா - சுப்பையா
கதிருவா இருக்குதடா - வேலையா
கதிரறுக்கும் காலமல்ல - சுப்பையா
ஆட்டுத்தழை அறுப்பாளடா - வேலையா
அண்டையிலே வந்துட்டாளோ - சுப்பையா
அன்னம் போலே முன்னேவரா - வேலையா
அவள் என்-அத்தைமவ ரத்தினம்டா - சுப்பையா
அவள் உரிமையுள்ள புருசனும் நீ - வேலையா
அடுத்த மாசம் பரிசம் வைப்பேன் - சுப்பையா

[இந்தப் பாட்டை உதவியவர்:
ஸ்ரீமான் கே. ஆர். ராஜகோபாலன், கும்பகோணம்.]

* * * * *

கண்டு பிடித்தவர்கள் இவர்களே!

★

சென்ற வாரம் 'எக்ஸ்ரே', புகைப் படம், 'பிலிம், க்ளோரோபார்ம் ஆகியவற்றை முதலில் கண்டு பிடித்தவர்கள் யார்? என்ற கேள்விகள் வெளிவந்திருந்தன. அச்சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட வருஷமும் கண்டுபிடித்தவர்களின் பேயர்களும் வருமாறு:—

எக்ஸ்ரே

★

வைத்திய உலகத்துக்கு இன்று இன்றியமையாத சாதனமாக விளங்கும் இந்த "எக்ஸ்ரே" 48 வருஷங்களுக்கு முன்பு அதாவது 1895-ம் வருஷத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதைக் கண்டு பிடித்தவரின் பெயர் ராண்ட்ஜென் என்பதாகும்.

★

புகைப் படம்

★

நொடிப்பொழுதில் உங்களைப் படம் பிடித்துத் தரக்கூடிய இந்தக் 'கலை'யைக் கண்டு பிடித்து "ஸில்வர் நைட்ரேட்" உதவியைக் கொண்டு அதை அபிவிருத்தி பெறச் செய்தவர் இருவர். ஒருவரின் பெயர் வெட்ஜ்வுட்; டேவி என்பது மற்றொருவரின் பெயர். மேற் சொன்ன முறையைக் கொண்டு 1802-ம் வருஷத்தில் அதாவது சுமார் 141 வருஷங்களுக்கு முன்பாக புகைப் படக் கலை அபிவிருத்தி செய்யப்பட்டது.

இந்த வருஷத்தில் புகைப் படத் தொழிலிலேயே பிரமிக்கத்தக்கபடி ஒரு அபிவிருத்தி ஏற்பட்டுளது. அதாவது 'நெகடிவ்' இல்லாமலேயே படம் எடுக்க வசதி செய்யப்பட்டிருக்கிறதாம். பிரான்ஸில் பிரபல விக்ஞானியான பிரின்ஸ் டி பிராக்ளே என்பவர் இதைக் கண்டுபிடித்திருக்கிறாயாம்.

★

பிலிம்

மேலே சொன்ன இரண்டு சாதனங்களும் கண்டு பிடிக்கப்பட்ட வருஷங்களை ஒத்திட்டுப் பார்க்கப் போனால் 'பிலிம்' சமீபத்தில் தான் கண்டு பிடிக்கப்பட்டு உபயோகத்துக்கு வந்திருக்கிறதென்று சொல்லலாம். டேவிட் வாஸ்க் என்பவர் 1907-ம் வருஷத்தில்தான் 'பிலிம்' உபயோகத்தைக் கண்டு பிடித்தார்.

★

'க்ளோரோபார்ம்'

ஆபரேஷன் செய்யும் போது நோயாளிகளுக்குக் கொடுக்கப்படும் இந்த 'க்ளோரோபார்ம்' கண்டுபிடிக்கப்பட்டு இன்றைக்குச் சுமார் 112 வருஷங்களுக்கு மேலாகிவிட்டது. முதன் முதலில் ஜே. வி. லைபிக் என்பவரும் ஈஸௌபியிரானும் 1831-ம் வருஷத்தில் சேர்ந்து இதைத் தயாரித்தார்கள்.

போர்முனை படக்காரர் செய்யும் வேலை



மத்திய கிழக்கில் பிரிட்டிஷ் போர்முனையில் முன்னணியிலிருந்து படமெடுக்கும ஒருவர் யுத்த களத்தில் நடந்த குண்டு வீச்சைப் படமெடுக்கிறார்.

திட்டமான வாழ்க்கை

(வ. ரா.)

வாழ்க்கையில் பற்று இல்லாமல் போகவே, நம்மவர்களுக்கு காரியம் எதுவும் செய்ய, மனமில்லாமல் போய்விட்டது. அவசர அவசரமாக, இந்த உலக வாழ்க்கையை முடித்துக்கொண்டால், தாங்கள் ஆசைவைத்து மண் உலகத்தில் கிடைக்காத அத்தனையையும் கொடுக்க தயாராய்க் காத்துக்கொண்டிருக்கும் ஒரு உலகத்துக்குப் போய்ச் சேரலாம் என்ற ருசுவில்லாத ஒன்றை நம்பி, நம்மவர்கள் சீர்கெட்டுப் போய்விட்டார்களே என்று வருந்திக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில், நண்பரும் வந்து சேர்ந்தார்.

நண்பர்:—என்ன! இன்றைக்கு அதிகமான முகவாட்டத்துடன் இருக்கிறீர்களே!

நான்:—அதிகமும் இல்லை; குறைவும் இல்லை. ஒரே அளவில்தான் இருக்கிறது. என்ன செய்தால், நம்மவர்கள் பெரிய லக்ஷியத்தில் ஈடுபட்டு, மானத்தோடும் மரியாதையோடும் வாழமுடியும் என்பதைப்பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன்.

நண்பர்:-என்ன முடிவுக்கு வந்தீர்கள்?

நான்:-பாரதியாரே, 'சொல் வேண்டும்' என்று கேட்டுவிட்டு, நம்மவர்களைத் தட்டி எழுப்பும் சொல் எது என்பதை விளக்கமாக குறிப்பிடாமல், மறைந்துபோய் விட்டாரே! எனக்கு, திடீரென்று அந்த 'மந்திரச் சொல்' கிடைக்கப் போகிறதா?

நண்பர்:-உங்களுக்குத்தான், முயற்சியில் நம்பிக்கை உண்டே! முயற்சி செய்தால், தானே அந்த மந்திரச் சொல் கிடைக்காதா!

நான்:-உம்முடைய கிண்டல், ஒரு புறம் இருக்கட்டும். நம்தேசம் உன்னதமான நிலைமைக்கு வருவது நிச்சயம். இருந்தாலும், அதற்கு குறுக்கே நிற்பவர்கள் நம்மவர்களின் பாட்டிமார்கள்.

புதிர் ஆயிருக்கிறது

நண்பர்:—என்ன புதிர் போடுகிறீர்களே?

நான்:—புதிர் இல்லை. மண்ணுவது திண்ணம் இந்த வாழ்க்கை என்று கெட்டியாக முந்தானியில் முடிந்துகொண்டிருக்கும் பாட்டிமார்கள் சொல்லுவதைக் கேட்டிருக்கிறீர்களா?

நண்பர்:—எவ்வளவோ சொல்லுகிறார்கள்! நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

நான்:—பாட்டிமார்கள் சொல்லுவார்கள்:—'ஏ! கோவிந்தா (பேரன்) கலிகாலத்திலே, நிஜம் பேசினால் பகைப்படி மண் தான் வயிற்றுக்கு கிடைக்கும். பொய் சொன்னால்தான் பிழைக்கலாம். கோணல் எழுத்து கற்றுக்கொள்ளவேண்டும்.

நண்பர்:—கோணல் எழுத்து என்றால்......?

நான்:-கோணல் எழுத்து என்றால், இங்கிலீஷ் பாஷை என்று பாட்டிமார்களின் அகராதியில் அர்த்தம். 'பொய் சொல்லணும்; நம்ம பாஷையை கற்றுக்கொள்ளலாகாது. கற்றுக்கொண்டால் வயிற்றுப் பாட்டுக்கு திண்டாட்டம்தான்' என்று பாட்டிமார்கள் சொல்லும் பொழுது, இவை யிரண்டையும் அலக்ஷியம் செய்யக்கூடிய பேரன் இருக்கவேமாட்டான்.

நண்பர்:-நீங்கள் சொல்லுகிற மாதிரி, பாட்டிமார்கள் சொல்லுவதாகவே வைத்துக் கொள்ளுவோம். அதனால் வந்த ஆபத்து என்ன?

நான்:-பொய் சொன்னால், யார் யாரை நம்பப்போகிறீர்கள்? நம்மவர்களுக்குள் ஒற்றுமை ஏற்படுவதற்கு வழியே இல்லாமல் போய்விட்டது. எனவே, நம்மவர்கள் தனித் தனியாகவும், துண்டு துண்டாகவும் இங்கிலீஷ்காரர்களுக்கு சலாம் போட்டு, ஜீவனம் செய்யவேண்டிய நிலைமைக்கு வந்துவிட்டார்கள். இங்கிலீஷ்காரனுக்கு சலாம் போடுவதாயிருந்தால், அவனுடைய பாஷை தெரிந்தால்தானே சலாம் கோணாமல் சரியாக விழும்? இதுதான் பாட்டி உபதேசத்தின் பயன். இதைக் காட்டிலும் வேறு பயங்கரமான ஆபத்தும் வேண்டுமா?

செல்வாக்குள்ள பாஷை

நண்பர்:—உலக முழுவதும் செல்வாக்குடன் இருக்கும் இங்கிலீஷ் பாஷையை படிக்க வேண்டும் என்று பாட்டி சொல்லுவதில், என்ன பிசகு இருக்கிறது?

நான்:—நீரும் பாட்டியின் மாயப் பிரசார வலையில் அகப்பட்டுக் கொண்டீரா? நம்முடையது குச்சு வீடாக இருக்கலாம். குச்சு வீட்டை மச்சு வீடாக ஆக்க வேண்டுமே யொழிய, வாடகை கொடுத்து பிறருடைய மச்சு வீட்டில் குடியிருக்கும் ஆசையை வைத்துக் கொள்ளுவது பெரிய விபரீதத்தில் கொண்டு போய் விடும்.

நண்பர்:—எப்படி?

நான்:-உமக்கு ஐரிஷ் தலைவர் டிவாலராவைப் பற்றி தெரிந்திருக்கும். அயர்லாந்துக்கு சுயராஜ்யம் கிடைக்கு முன், அவரை ஒரு நண்பர், 'உங்களுக்கு சுயராஜ்யம் வேண்டுமா' அல்லது ஐரிஷ் பாஷையைப் பேசும் உரிமை வேண்டுமா, என்று கேட்டாராம். தாய் பாஷையைப் பேசும் பாக்கியமும் பாத்தியமும் ஐரிஷ்காரர்களுக்கு கிடைத்துவிட்டால், கண் இமைப் பொழுதில் சுயராஜ்யம்தானே கிடைத்து விடும் என்று டிவாலரா பதில் சொன்னாராம். இந்த ரகசியம் நம்மவர்களுக்கு இன்னமும் சரியாகப் புலப்படவில்லையே! என்ன செய்கிறது?

நண்பர்:—பாட்டி சொல்லிக் கொடுத்த வயிற்றுப் பிழைப்பு உபாயம் விபரீதத்தில் கொண்டு போய் விட்டது என்கிறீர்கள்?

"நான்:-அதை ஏன் கேட்கிறீர்கள்! பாட்டியின் உபதேசத்தால், நம்முடையது என்று ஒன்றுமில்லாமல் போய் விட்டது நம்மவர்கள் பிறந்து வளர்ந்து இறக்கும் இந்த தேசத்திலே! இதைக் காட்டிலும் விபரீதமான பலன் வேறு எது வேண்டும்?

நண்பர்:-என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்?

நான்:—நான் சிறு வயதில் பள்ளியில் படிக்கும் பொழுது எங்கள் வாத்தியார், ஒவ்வொரு தேசமும் அதில் வசிக்கும் ஜனங்களுக்கு சொந்தம் என்றும் இந்தியா, (இந்தியர்களுக்கு அல்ல) இங்கிலீஷ்காரர்களுக்கு சொந்தம் என்றும் எங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தார்.

நண்பர்:—உண்மையிலேயா?

நான்:—ஆமாம்! எப்பொழுது இந்தியா இங்கிலீஷ்காரர்களுக்கு சொந்தமாகி விட்டதோ, அவர்கள் கொடுத்ததைக் கொண்டுதானே, நம்மவர்கள் வாழ்க்கை நடத்தி திருப்தி அடைய வேண்டும்?

நண்பர்:— எல்லாவற்றிற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று நம்மவர்கள் திக்கற்றவர்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே, அது இங்கிலீஷ்காரர்கள் கொடுத்துத்தான், நம்மவர்கள் உயிர் வாழ முடியும் என்பதை குறிப்பிடுகிறதா?

இப்பொழுது உங்கள் தேவைக்கு வேண்டிய ரெக்ஸோனு கிடைப்பது கடினமாயிருந்தால் அதற்காக கவலைப்பட வேண்டாம். இந்த அற்புதமான, ஔஷத சக்தி வாய்ந்த இதமளிக்கும் சோப்பிற்கு ஏற்பட்ட நெருக்கடி தாற்காலிகமானதே.

சரும ஆரோக்கியத்திற்கு ரெக்ஸோனு

RP. 19-111 TM REXONA PROPRIETARY LIMITED

நான்:-அது என்ன மாயமோ எனக்குத் தெரியாது. முக்தி என்றும் பகவானுடைய பாத கமலங்கள் என்றும் வாயாரப் பேசிக் கொண்டிருந்தவர்களுக்கு வயிற்றுப் பிழைப்புதான் முக்கியமான அலுவல் என்பதை பாட்டி அழுத்தமாக உபதேசம் செய்த பின்னர், நமது நாட்டாருக்கு, உயர்ந்த லக்ஷியம் எப்படி இருக்கமுடியும்?

நண்பர்:-என்ன! அப்படிச் சொல்லுகிறீர்கள்!

நான்:-எந்தக் காரியத்தையும், வயிற்றுப் பிழைப்பு என்ற தராசில் வைத்து நிறுக்க ஆரம்பித்த பின்னர், நம்மவர்களுக்கும் உயர்ந்த வாழ்வுக்கும் என்ன சம்பந்தம்? எஜமானர்களாகிய இங்கிலீஷ்காரர்களை எல்லா வகைகளிலும் சந்தோஷப்படுத்தும் முயற்சிக்கான தத்துவத்தையும் உபாயங்களையும் நம்மவர்கள் கைக் கொண்டார்கள். இப்படி 'காக்கா பிடிக்கிற' வேலையில், தேச முழுதும் ஈடுபட்டுப்போய்விட்டால், அதற்கு விரைவில் விமோசனம் உண்டாகுமா?

நண்பர்:— வயிற்றுப்பிழைப்பு என்ற காரணத்தைக் கொண்டு, சுயமரியாதையை பறிகொடுத்துவிட்டால், அந்த நிலைமை மோசமான நிலைமைதான்.

நான்:—இச்சகமாகப் பேசுவதில் 'நான் முன்னே நீ முன்னே' என்று நம்மவர்கள் போட்டிபோட்டால், அவர்கள் எந்தக் காலத்தில் முன்னேறி, உலகத்தாருடைய மதிப்புக்கு உரித்தாக முடியும்

நண்பர்:—இதெல்லாம் பாட்டி, சத்தமில்லாமல் செய்த வேலை என்பது உங்கள் முடிவு!

நான்:—பாட்டி, பாவம் என்ன செய்வாள்? 'வயிற்றுப் பிழைப்பு' நிலைமைக்கு, இந்த தேசம் வந்ததை உணர்ந்தாள். அதற்கான உபாயத்தை, அவளுடைய அறிவுக்கும் அனுபவத்துக்கும் சக்திக்கும் எட்டிய அளவில் சொன்னாள். இது, பெண்கள் இந்த நாட்டில் ஆண்களுக்கு அடிமைகளாக வெகு காலமாக வாழ்ந்து வந்த தன் பயன் ஆகும். சோறு வடித்துப்போடும் பொறுப்பை மட்டும் ஏற்றுக்கொண்ட திக்கற்ற பெண்களின் கண்களில் வேறு எவ்வித உபாயமும் படுவதற்கு நியாயமில்லை.

நண்பர்:—இந்த மாதிரிதான் மற்ற நாடுகளிலும் நடந்திருக்கிறதா?

நான்:-தென் ஆப்பிரிக்காவில், போயர் தாய்மார்கள், தங்கள் குழந்தைகள் இங்கிலீஷ் பாஷையை கற்கக் கூடாது என்று கட்டுப்பாடு செய்தார்கள். இது சுதந்திர ஸ்திரீகளின் பார்வையில்படும் வழியாகும். அடிமையின் மனோபாவமும் சுதந்திரத்தில் வளருபவனுடைய மனோபாவமும் ஒன்றாகுமா?

நண்பர்:-உண்மை.

நான்:-உயர்ந்த தத்துவமும் அதற்கு எவ்விதத்திலும் பொருத்தமில்லாத வாழ்க்கையும் பாட்டியின் உபதேசமும் வயிற்றுப்பிழைப்பு நிர்ப்பந்தமும் நம்மவர்களை கேவலமாக்கி விட்டன. வாழ்க்கையில் மலிந்து கிடக்கும் களைகளை பறித்து எறியாமல், முன்னோர்கள் கீறி வைத்த கோடு என்று கிளிப்பிள்ளையைப் போல, இனியும் பேசிக் கொண்டிருந்தால்-?

நண்பர்:-என்ன?

நான்:-உயிரும் அறிவும் இல்லாத நடை பிணங்களைப் போல, நம்மவர்கள் வாழ்ந்து நம் நாட்டின் பேரில் பாயும் அந்நியர்களுக்கு எல்லாம் அவர்கள் கூலி வேலை செய்யத்தான் நேரும். பெருத்த அவமானம்!

ஜிம்மியின் "லிவர் க்யூர்"

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு சிறந்த நிவாரணி

நோட்டிஸ்.

கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்யும் எமது வைத்திய ஆலோசகரை அந்தந்த தேதிகளிலும், இடங்களிலும் கண்டு ஆலோசனை பெறலாம்.

நேரம்: காலை 9 முதல் 12 வரை - மாலை 4 முதல் 6 வரை.

இடம்		தேதி	விலாசம்
தஞ்சாவூர்		பிப். 14 & 15௳	Mr. T. G. ஸ்வாமிநாதராவ், கெமிஸ்ட்.
பட்டுக்கோட்டை	,,	17௳	,, V. ஜெகதீசன், வக்கீல் குமாஸ்தா.
திருத்துரைப்பூண்டி	,,	19௳	,, T. V. சந்திரசேகரன் பிள்ளை, மருந்து ஷாப்.
மன்னார்குடி	,,	20௳	,, டிரக்ஸ் ஸ்டோர்ஸ்.
திருவாரூர்	,,	21௳	,, சுப்பய்யர் மெடிகல் ஸ்டோர்ஸ் அல்லது மெடிகல் எம்போரியம்

ஜிம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்,
கும்பகோணம்.

இந்தியாவின் ஸேவைக்கு

எங்களால் செய்யக்கூடிய சிக்கனங்கள்...



யுத்தம் என்றால் ஸாமான்கள் பஞ்சமும் உயரும் விலைவாசிகளும் எங்கள் ஸாமான்களின் விலையும் உயர்ந்துவிட்டது. ஆனால் எங்கள் ஸாமான்களின் குணத்தை குறைக்காமல் அவைகளை அடக்கம் செய்து அனுப்ப வேண்டிய பெட்டி முதலானதுகளை சிக்கனமாக உபயோகித்து எங்களால் இயன்றவரையில் குறைந்த விலைக்கு விற்க நாங்கள் ப்ரயத்தனப்படுகிறோம். இந்த நெருக்கடியான காலத்தில் எங்கள் சாமான்களுக்கு நியாயமான விலைகள் வைத்து விற்பதனால் உண்டாகும் லாபங்கள் உங்களைச் சேருகின்றன.

அப்போதைக்கப்போது எங்கள் சில்லரை விலை ஜாபதாவை பிரசுரம் செய்து உங்களுக்கு உதவி புரிகிறோம். நீங்கள் வேண்டிய அளவிற்குமேல் வாங்காமல் இருந்தால் நாங்கள் தற்கால விலைகளை நிலைநிறுத்த உதவி புரிந்ததாகும். எங்கள் விற்பனை ஆட்கள் நாடெங்கும் உள்ள பெரிய வியாபாரிகளுக்கும், சில்லரை வியாபாரிகளுக்கும் எங்கள் ஸாமான்களை கிடைக்கச்செய்வார்கள்.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மையைக் கருதி

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டது.

(TI 4032)

வெள்ளிக் கூஜா

சிறு கதை

★

ராஜி

மாஜிஸ்டிரேட் மருதவாணன் சில்லரைத் திருட்டுக் கேஸ்கள் சிலவற்றை விசாரணை செய்துகொண்டிருந்தார்.

சில நாட்களுக்குமுன் ஊரிலே ஒரு கலகம் நடந்தது. அதுதான் சரியான சமயம் என்று பார்த்து சிலபோக்கிரிகள் பிறர் சட்டைப் பைகளிலிருந்த கனமான பொருள்களையெல்லாம் தங்கள் பைகளுக்கு மாற்றிக்கொண்டு விட்டனர். அது சம்பந்தமாக ஸ்தல போலீஸார் பழைய குற்றவாளிகள் பலரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து மாஜிஸ்டிரேட்டின் முன் ஆஜர் செய்து விட்டார்கள். அதுபற்றிய விசாரணை தான் காலை வேளையில் சுறு சுறுப்பாக அன்று நடந்துகொண்டிருந்தது.

ஒரு அகன்ற நீண்ட மேஜைக்குப் பின்னால் மருதவாணன் கம்பீரமாக அமர்ந்திருந்தார். அவருடைய இடது பக்கத்தில், சற்றுத் தாழ்வான இடத்தில் மேஜையைப்போட்டுக் கொண்டு குமாஸ்தா உட்கார்ந்து ஓயாமல் ஏதோ வரைந்து தள்ளிக்கொண்டிருந்தான். அவனுக்குக் கிடைத்த சம்பளத்துக்கு அவன் ஏதாவது செய்து தானே ஆக வேண்டும்?

போலீஸாரால் கைது செய்யப் பட்டவர்கள் எல்லாரும் ஒருவர்பின் ஒருவராக மருதவாணன் முன் கொண்டு நிறுத்தப்படுகிறார்கள். மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளையும் போலீஸாரையும் இரண்டொரு கேள்விகள் கேட்கிறார். விசாரணை என்றால் ஒவ்வொரு கேஸுக்கும் பத்து நிமிஷமாவது ஆக வேண்டும். பத்து நிமிஷத்திற்குப் பிறகு அவர் நியாயம் வழங்குவார். அதாவது ஒவ்வொருவனும் எவ்வளவு காலம் சிறைவாசம் செய்யவேண்டும் என்பதைக் கோர்ட்டுக்கும் குற்றவாளிகளுக்கும் அறிவித்துவிடுவார். இதே மாஜிஸ்டிரேட் விசாரிக்க வேண்டிய வேறு சிக்கலான, சனியன் பிடித்த—அதாவது பெரிய 'இடங்கள்' சம்பந்தப்பட்ட—கேஸ்கள் பல இருக்கின்றன. அப்படியிருக்கையில், சில்லரைக் குற்றங்கள் செய்து கொண்டு தெருவில் நடமாடித் திரியும் அநாமதேயப் பேர்வழிகளுக்கென்று அவரால் அதிக நேரம் ஒதுக்கி வைக்க முடியவில்லை. தவிரவும் போலீஸார் தன் முன் கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் பேர்வழிகள் எல்லாரும் குற்றவாளிகள் தான் என்பதில் அவருக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இந்தக் குற்றத்தில் சம்பந்தப்படாதவர்களாகவே யிருக்கலாம். ஆனால் இதுபோல வேறு எவ்வளவோ குற்றங்கள் செய்தேயிருப்பார்கள். பின் என்ன? அவர்களை அகப்பட்டுக்கொண்ட போது சரியானபடி தண்டிக்கவேண்டியது தானே! எப்போதாவது யாராவது ஒருவன் குற்றமே செய்யாதவன், அப்பாவி தண்டனை அடைவதுண்டு. அதனால் என்ன? குற்றம் செய்யாதவர்களே தண்டனை அடைந்து தவிக்கும்போது நாம் தப்ப வழி ஏது என்று உண்மைக் குற்றவாளிகள் அலறிவிடமாட்டார்களா?.....

பெரியசாமியும் அப்போது கோர்ட்டில்தான் இருந்தான். இந்தத் தடவை என்னவோ போலீஸார் அவனைப் பிடிக்காமல் விட்டுவிட்டார்கள். குற்றவாளியாகவல்லாமல், குற்றவாளிகள் தரப்பில், போலீஸுக்கு எதிராகச் சாட்சி சொல்ல அவன் வந்திருந்தான். அவன் சாதாரணமாக எப்பொழுதுமே யாரிடமும் பயமில்லாமல், எதையுமே நிஜம் என்று அடித்துப்பேசக் கூடியவன். "குற்றவாளி இன்னொருடைய சட்டைப் பையிலிருந்து பர்ஸைக் களவாடிய துண்டா?" என்று மாஜிஸ்டிரேட் கேட்டதும் "இல்லை" என்று அவன் தயங்காமல் சாட்சி சொன்னான். வேறு ஏதாவது மிரட்டினால் "நான் பார்க்கவில்லை-கண்ணால் பார்க்காமல்அவன் திருடினான்னு சொல்ல லாங்களா?" என்பான். கலகம் நடந்த தினத்தன்று அவன் தன் தொழிலில் வெகு மும்முரமாக ஈடுபட்டிருந்து விட்டபடியால்தனதுசகோதரத் தொழிலாளிகளின் கைத் திறத்தைக் கண்டு வியந்துகொண்டு நிற்க அவனுக்கு அவகாச மில்லாது போய் விட்டதென்பது ரொம்ப வாஸ்தவம் தான். சாட்சி சொல்லுகிறேன் என்று வருகிறவனை விசாரிக்காமல் விடுவானேன் என்று மாஜிஸ்டிரேட் மருதவாணன் முதல் இரண்டு மூன்று கேஸ்களில் அவனைக் கூண்டில் ஏற்றி விசாரித்தார். அப்புறம் அவனைக் கூப்பிடவே யில்லை. பெரிய சாமியும் அலுத்துப்போய் வெளியே சென்றால் ஏதாவது 'லாபு'கரமாகப் பொழுதைக் கழிக்கலாமே என்று எண்ணிக் கோர்ட்டை விட்டுக் கிளம்பும் சமயம் மருதவாணன் வீட்டில் வேலை செய்யும் வள்ளியம்மை எசமானியிடமிருந்து எஜமானருக்கு ஏதோ அவசரச் செய்தி கொண்டு வந்திருப்பதைக் கவனித்தான். பின்னாலிருந்த ஒரு ஜன்னலருகே நகர்ந்து அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனித்தான்.

மருதவாணனுடைய சித்தப்பா பட்டணத்திலிருந்து ஏதோ அவசர காரியமாக வந்திருந்தாராம்; மத்தியானம் சாப்பிடக் காத்திருப்பாராம்; கோர்ட்டைக் கலைத்துவிட்டு சீக்கிரமே ஐயா சாப்பிட வீடு வந்து விட்டால் தேவலை என்று எசமானியம்மா வேலைக்காரி மூலம் சொல்லி அனுப்பியிருந்தாள். தன் சித்தப்பா வந்திருந்ததைக் கேட்டவுடன் மாஜிஸ்டிரேட் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தார். பின்னர் வேலைக்காரியிடம் சற்றுக் கோபமாகவே சொன்னார்; "இந்தப் பொம்பிளைப் புத்தியே இப்படித்தான்! நான் எவ்வளவு நாளாகச் சொல்லிக்கொண்டிருந்தேன். நம்ம சின்னப் பிள்ளையை வாசிக்க வைத்தபோது அவர் 'பிரஸெண்டா'க் கொடுத்த வெள்ளிக் கூஜாவை இப்படி நண்ட முண்டலாக நசுக்கி வைத்திருக்கயே—அதை நசுக் கெடுத்து, 'பாலிஷ்' பண்ணி புதுசாக்க வேண்டாமா என்று எவ்வளவோ தரம் சொன்னேன்; காதில் ஏறினால் தானே! இப்ப அவரே வந்துவிட்டார். அந்தக் கூஜா இருக்கும் இருப்பைப் பார்த்து அவர் என்ன நினைப்பார்? நாம் பிரியப்பட்டுக் கொடுத்தோமே, அதன் அருமை அறிந்து இவங்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களா?' என்று நினைக்கமாட்டாரா? தவிரவும் அவர் கருமி. பண்டம் வீணாகப் போனதைக் கண்டு சகிக்கமாட்டார். பணக்காரர்; பிள்ளை குட்டியில்லாதவர்; அவரைச் சரிப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டாமோ! சரி, சரி, அது கிடக்கட்டும். நான் ஜல்தி பதினொரு மணிக்கே வந்து விடுகிறேன். சாப்பாட்டுக் காவது ஏதாவது அவருக்குப் பிடித்ததாக,'ஜோரா'ய்த்தயார் பண்ணி வைக்கச் சொல்லு. சித்தப்பாவுக்கு பட்டாணியும், முட்ட கோஸும் பிடிக்கும். வாங்கிச் சமைக்கச் சொல்லு. நானும் சீக்கிரமே வந்து விடுகிறேன்" என்றார். வேலைக்காரி போனபின் அவர் மறுபடியும், சற்றுத் துரிதமாகவே குற்றவாளிகளை விசாரணை செய்து, கேள்விகள் கேட்டு நியாயும் வழங்கலானார்.

இவ்வளவையும் பின்னாலிருந்து ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்த பெரியசாமியும் வேலைக்காரி போனவுடன் அவளைப் பின் தொடர்ந்து கோர்ட்டை விட்டு வெளியேறினான். இரண்டு திருப்பங்கள் திரும்பியதும், அவன் ஓடிப்போய் மாஜிஸ்டிரேட் வீட்டு வேலைக்காரியை நிறுத்திப் பின்வருமாறு சொன்னான். "ஐயாவே முட்டகோஸும், பட்டாணியும் டொமாடோவும் வாங்கி அனுப்பிவிடுவதாகச் சொன்னாங்க. உடனே அனுப்புவாங்க. அம்மா வேறு வாங்கவேண்டாம். என்னையே நேரில் மார்க்கெட்டுக்குப் போய் வாங்கிக் கொண்டு கொடுக்கச் சொன்னாங்க. ஜல்தி வந்து விடுகிறேன்."

பெரியசாமிக்கு மருதவாணனின் வீடு தெரியும். பத்து நிமிஷத்துக்கெல்லாம் அவன் ஒரு சிறு கூடையில் ஒரு பெரிய முட்ட கோஸுடனும், ஒரு வீசைப் பட்டாணி,டொமாடோவுடனும் அவர் வீட்டை அடைந்தான். டவுன் மார்க்கட்டில் இருந்ததில் மிகவும் சிறந்ததைத் தான் மாஜிஸ்டிரேட்டின் சித்தப்பாவுக்கென்று அவன் வாங்கிக்கொண்டு வந்திருந்தான். இரண்டு ரூபாய் வரையில் கையைப் பிடித்துவிட்டது. மாஜிஸ்டிரேட்டின் மனைவி ஒவ்வொன்றாக விலை விசாரித்த போது "ஐயா இங்கு காசை வாங்கிக்கொள்ளச் சொன்னார்" என்று சொல்லி கறிகாய்க்குள்ள காசை வாங்கிக்கொண்டு விடலாமா என்று பெரியசாமி சிறிது நேரம் தயங்கினான். ஆனால் அதைவிட அதிக லாபகரமான ஒரு 'வஸ்து'வின்மேல் அவன் திருஷ்டி விழுந்திருந்ததால் அவன் அந்த இரண்டு ரூபாயை ஒரு பொருட்டாக எண்ணவில்லை.

"ஐயா ஜல்தி வந்தூடறதாச் சொன்னாங்க. ஸ்நானத்துக்கு வெந்நீர் போட்டுவைக்கச் சொன்னாங்க; உடம்பு என்னவோ போலிருக்காம். இந்தக் காய் கறிகளை சித்தப்பாவுக்கும் பிடிச்ச வகையில் சமைத்து வைக்கச் சொன்னாங்க" என்றான்.

"சரி" என்றாள் மாஜிஸ்டிரேட்டின் மனைவி.

"சித்தப்பா தந்த ஒரு வெள்ளிக் கூஜா ஒரேயடியாக நசுங்கிக் கிடக்குதாமே? அதை வாங்கிக்கிட்டுப் போய் அடுத்த தெரு சாமிநாதப் பத்தனிடம் கொடுத்து நசுக்கெடுத்துக் கொண்டு வந்து வைக்கச்சொன்னாங்க" என்றான் பெரிய சாமி.

மாஜிஸ்டிரேட்டின் மனைவிக்கு எவ்விதமான சந்தேகமும் தட்ட வில்லை. கூடத்திலிருந்த ஒரு அலமாறியைத் திறந்து பல இடங்களில் நசுங்கியிருந்த ஒரு பெரிய வெள்ளிக் கூஜாவை எடுத்துப் பெரிய சாமி கையில் கொடுத்தாள்." ஜல்தி வந்து விடு" என்றாள்.

"தெரியாதா? ஐயா சொன்னாரு ஒரு நொடியிலே வந்து விட மாட்டேனா?" என்று சொல்லிக்கொண்டே பெரிய சாமி வெள்ளிக் கூஜாவை மேல் துண்டில் சுற்றி எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

அடுத்த தெருவில், பெரிய சாமி, தனக்கு மிகவும் ஆப்த நண்பனும், தொழிலில் கூட்டாளியுமாகிய துரைசிங்கத்தைச் சந்தித்தான். துரைசிங்கத்துடன் அவனுடைய மகனும்—ஏழெட்டு வயதான ஒரு பையன்—வந்து கொண்டிருந்தான். அவர்களிடம் தன்னுடைய சாமர்த்தியத்தைப் பற்றி ரகசியமாகச்சொல்லாமல் இருக்க முடியவில்லை.

ஆனால் துரைசிங்கம் அவனைத் தட்டிக்கொடுக்க வில்லை. அதற்கு மாறாக "போடா மடையா!" என்றான். இரண்டு ரூபாய் கறிகாயை விட்டு விட்டு அதற்குப் பதில் ஒரு வெள்ளிக் கூஜாவைக் கொண்டு வருவது பிரமாத சாமர்த்தியமாகுமா? எந்த வியாபாரியும் இது மாதிரிக் காரியத்தைச் சாதித்திருப்பானே! கெட்டிக்காரனாயிருந்தால் அதையும் விட்டிருக்கக் கூடாது" என்றான்.

(15-ம் பக்கம்)

சங்கீதப் பகுதி



ஸ்ரீ சியாமா சாஸ்திரிகளின் க்ருதிகள்

[காப்பிரைட்]

[சங்கீத ரத்னகர அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது.]

I

பல்லவி

நின்னே நம்மிநானு—ஸதா நாவின்ன பம்பு
விநி நன்னுப்ரோவுமு—

அனுபல்லவி

கன்னதலி கதா பிட்டயனி—
கனிகர மிந்தை னலேதா!—அம்ப:
பன்னக தருணி ராணி! சுகபாணி!
காமாக்ஷி! கல்யாணி.

சரணம்

ச்யாம கிருஷ்ண ஸஹோதரி பக்த
காமிதார்த்த தாயகி—காமாக்ஷி! கஞ்சதளாய தாக்ஷி!
காருண்ய மூர்த்தி நீவே ஸம்பத.

II

நின்னே ஸதா நம்மினானு—உன்னையே எப்பொழுதும் வேண்டினேன்.
நாவின்ன பம்புவினி நன்னு ப்ரோவுமு—என் விண்ணப்பத்தைக்கேட்டு என்னைக் காப்பாற்று.
கன்ன தல்லிகதா?—என்னைப் பெற்றத்தாயல்லவா ?
பிட்டயனி கனகரமு இந்தைனலேதா?-உன் குழந்தையென்று இரக்கம் எள்ளளவு மில்லையா?
அம்ப பன்னக தருணி ராணி சுகபாணி காமாக்ஷிகல்யாணி—தாயே ஸர்ப்பங்களை ஆபரணமாகக் கொண்டவரின் பார்யே! கிளியைக்கையில் வைத்திருப்பவளே காமாக்ஷி மங்களரூபியே!
ச்யாம கிருஷ்ண ஸஹோதரி—க்ருஷ்ணனுடன் பிறந்தவளே!
பக்த காமித அர்த்த தாயகி—பக்தர்கள் விரும்பினவைகளைக் கொடுப்பவளே
காமாக்ஷி—கஞ்சதளாயதாக்ஷி—தாமரையிதழ்களை யொத்த நேத்ரங்களையுடையவளே!
காருண்ய மூர்த்தி—கருணையின் ஸ்வரூபமே!
நீவே ஸம்பத—ஸகல ஐச்வர்யமும் நீயே.

III

ராகம்:—தோடி **தாளம்:—மிச்ரசாபு**

பல்லவி

(1) , ஸா ஸா பா | பபா . பதபத | பா ; பத || நிநித . தபநித ||
நின் னே நம் | . மி நா . . | . நு . ஸ || தா . . நே . . . ||

(2) ம + பகமா பா || பபா . பதபத || பா ; ; பத நிஸா . நிதபத ||
. . நின் . னேநம் || . மி . நா . . . || னு ஸ . த . . . நெ . . . . ||

(3) ம + ஷி || ஷி || நிஸா ; நி ஸ || . நி தா ; . ஸா ; ||
= ஷி || ஷி || நு . ஸ . || தா . . நா . . ||
ஸா ரி மககரி | ரிஸா . ஸநிகா | ரி , நீதம || ஸா , கரிரிஸ || . நி +
வி . , ன்ன . பம் | , பு வி . நி | நன்னு . . || ப்ரோவு . மு . || . (நி)

அனுபல்லவி

, ஸா நீ தா | பபக . மாதப | தா ; . நிஸ | நிதா பா பா || . தநிஸாஸா ||
. கன்னதல் | . . லி க . . | தா பி | ட் . . யனி . || கனகர |
ஸா , ரிஸஸநி || தநித நிஸநித || தா , கமபத || நிஸா நீ . தா . ||
மிந்தை . ந . || லே . . . . . . த . || . அம் . ப . || . கன்னதல் || ஷி
தநித நிஸநித ||, நிஸா . ததா ||, ததக நிரீ || ஸா ; ; ரிஸா || நிதா
லே . . . . தா . || . பன்ன . க . || தரு . ணி || ரா . ணி || சுக
நீ ரி || ஸா ; ; நீஸரி || ஸரிஸநி தாபா; பா ; , மாபத | பதபமகா
வா . | ணி . கா . . || மா . . க்ஷி கல் | ல் யா
ரீ ஸா ; || ரி
ணி || நின்னே . (நி)

சரணம்

கா , கரிமா | காரிரீஸநி | ஸா ; , நித | நீ ; ; , | ரிஸாநி
சா ம | க்ருஷ்ண ஸ | ஹோ த | ரி , | ப . . . . .
தநிரி | கா , கா மா | தா , தா நீ | நிஸநி . தபபம | ஸா . நி
க் தி | கா மி | தா ர்த்த | தா ய கி || கா மா
த தா , | தா , ஸா ரீ | ஸா , ரீ ஸா | நி . தா நீ ரி | ஸா த
க்ஷி | க ஞ் ச த | ளா ய | தா . . . . . | க்ஷி கா
கா ரீ | நி தா கா ரீ | நி தா நி ரி ரி நி | த ப ம ம க ரி ஸ || ரி
ருண்ய | மூ . . . ர்த்தி | க தா இ வே | ஸம்ப . த || (நி)

இக் க்ருதியும் காலஞ்சென்ற கீர்த்தனாசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் சரிபார்த்தது.

தமிழர் வீரம்

ஒரு நல்ல மருந்து

★

பி. ஸ்ரீ.

சில மாதங்களுக்கு முன் ஒரு நண்பர் என்னைப் பார்க்க வந்தார். அதற்கு முன் அவர் கூவம் வாசனையே தெரியாத குக்கிராமவாசியாய்க் காலம் கழித்தவர். அவர் வந்த சமயத்தில், கிராம வாசனையே அறியாத நகரவாசி ஒருவர் என்னுடன் இருந்தார். அந்தத் தாமிரபர்ணிக்கரை வாசிக்கு இந்தக் கூவம் நதி தீர வாசியை அறிமுகப்படுத்திவைத்தேன். எங்கள் சம்பாஷணை விரைவில் யுத்தப் போக்கிலே திரும்பி விட்டது. கிராம வாசியும் பத்திரிகை படிப்பவர்; நாட்டுப் போக்கும் உலகப் போக்கும் தெரிந்து கொண்டவர்: அதனல் அந்தச் சம்பாஷணையில் உத்சாகமாய் ஈடுபட்டார்.

பயத்திற்கும் ஒரு மருந்து

கிராம வாசி:—[சம்பாஷணையின் நடுவிலே] இந்த உலக மகா யுத்தத்திலேதான் எத்தனை கொடுமைகள்,—ராட்ஸச் செயல்கள்! எனினும் இத்தனை பயங்கரங்களுக்கும் இடையே அடடா,! அந்த ருஷியர்களின் வீரமும் சீனர்களின் வீரமும் எவ்வளவோ ஆறுதல் அளிக்கின்றன! இந்தமாதிரி வீரம் நம்முடைய நாட்டில் மருந்துக்கு வேணுமானலும் கிடைப்பதில்லையே! எங்களூரில் 'வீரம்' என்றலே 'மருந்துக் கடையில் கேளுங்கள் ஐயா!' என்று தான் சொல்லுவார்கள். அவர்களுக்குத் தெரிந்த போரெல்லாம் வைக்கோல்-போர்தான்!

நகர வாசி:—'வீரம்' என்று ஒரு மருந்தா? அது என்ன? யார்?

கிராமவாசி:—[சிரித்துக் கொண்டே]. ஆம், வீரம் பூரம் எல்லாம் சித்த வைத்தியத்திலே பாஷாண மருந்துகள்.

நகரவாசி:—[அதிகமாய்ச் சிரித்துக் கொண்டு] ஓஹோ! சித்த வைத்தியமா? சித்த வைத்தியமும் சுத்தப் பைத்தியமும் எங்களுக்கு ஒன்றுதான்! எங்கள் மருந்துகள் எல்லாம் சீமைச் சரக்குகள்!

நானும் அடக்க முடியாத சிரிப்புடன், "கூவம் நதி தீரத்திலே, பேனவால் காகிதங்களை உழுது தள்ளும் குமஸ்தாக்களும் உத்தியோகஸ்தர்களும் பேராசிரியர்களும் பெரியபெரிய வக்கீல்களும் வைக்கோல்—போரைத்தான் கண்டவர்களா, பட்டிக்காட்டார் போலே?" என்று மெள்ளச் சொன்னேன். பிறகு கிராம நண்பரை நோக்கி, "தாங்கள் சீன வீரத்தையும் ருஷ்ய வீரத்தையும் புகழ்ந்தது சரி. ஆனல் வீரம் என்பது சீன-ருஷ்யச் சரக்கு மட்டுமல்ல: சீமைச் சரக்கு மட்டுமல்ல; அன்னிய நாட்டிலிருந்து இறக்குமதியாக வேண்டிய புதுமைச்சரக்குமல்ல; வீரம் சுதேசச் சரக்குங்கூட; ஆம், தமிழர்களின் சொந்தச் சரக்கு" என்றேன்.

"அதெப்படி?" என்று ஆசனத்திலிருந்து துள்ளிக் குதித்தார் கிராமவாசி. நகர வாசியின் முகத்திலும் ஆச்சரியம் கூத்தாடிற்று. "டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்டிருக்கும் சங்க நூல்களை நீங்கள் பார்த்ததில்லையோ? அந்த டாக்டர் அங்கே காட்டும் வீர மருந்து அசல்—சரக்கு; பழங் காலத்துத் தமிழர் சரக்கு; அந்தக் காலத்தில் நமது நாட்டிலே மலிவாகவும் ஏராளமாகவும் கிடைத்தது...ஆம், இந்தச் சங்க நூல்களைப் படிப்பதே இந்தக் காலத்துப் பயத்திற்கும் ஒரு மருந்து!" என்று நான் சொன்னேன்.

கிராம நண்பரும் நகர நண்பரும் பல கேள்விகளும் குறுக்குக் கேள்விகளும் கேட்கத் தொடங்கினர்கள். நான் சங்கத்தைக் குறிப்பிட்டதும், கிராமவாசி விகடமாக, "எங்கள் ஊரிலே ஊது சங்கம் தவிர வேறு சங்கம் தெரியாது,ஐயா!" என்றர்.

"அந்தத் தமிழ்த் தாத்தா சங்க நூல்களை வெளியிடுவதற்கு முன், தமிழ் நாடு முழுவதும் தங்கள் குக்கிராமத்தின் நிலையிலே தான் இருந்தது" என்ற பீடிகையுடன் நான் பேசத் தொடங்கினேன்: "நமது நாடு எவ்வளவோ பொருட் செல்வத்தையும் அறிவுச் செல்வத்தையும் இழந்து விட்டது. ஓரளவு அறிவுப் பஞ்சத்தையாவது போக்குவோமென்று செந்தமிழ்ச்செல்வரான தாத்தா இராப்பகலாக உழைத்து உழைத்துச் சங்க நூல்களை அச்சிட்டார். அச்சிட்டு, 'இதோ உங்கள் குல தனம்! கண்ணுள்ளவர்கள் கண்டுகொள்ளலாம்' என்று அவற்றிலுள்ள புதை பொருளையும் காட்டிக் கொடுத்தார். பிறகு அந்த நூல்களை ஆராய்ந்து ஆராய்ந்து ஆராய்ச்சிக்காரர்கள் சரித்திர சம்பந்தமாகப் பல உண்மைகளைக் கண்டு பிடித்து வருகிறர்கள். இவற்றிலெல்லாம் அதி முக்கியமான உண்மை, தமிழர்களும் ஒரு காலத்தில் தற்கால ருஷியர்களைப்போலவும் புதிய சீனர்களைப்போலவும் வீர வகுப்பினராக வாழ்ந்தார்கள் என்பதே. வேறு சரித்திர ஆராய்ச்சிகளும் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன. டாக்டர் சாமிநாதையரைப்போன்ற வித்யா வீரர்களின் கைங்கரிய விசேஷத்தினல், 'தமிழர் சரித்திரம்' ஒன்று உதயமாகி, நம் கண் முன்னே உருவாகி வருகிறது. இந்தச் சரித்திரம் ஸாராம்சத்தில் 'வீர சரித்திரமே' என்பது நமக்கெல்லாம் எவ்வளவு உத்ஸாகம் அளிக்க வேண்டிய உண்மை?"

அவநம்பிக்கைக்கும் மருந்து

நகர நண்பரோ அவநம்பிக்கையுடன், "தாங்கள் ஒரு பிரசங்கமே செய்துவிட்டீர்கள். ஆனல், தங்கள் பேச்சு வன்மையால் என்னையும் ஏமாற்ற முடியுமா? இந்தியாவின் வீர ஜாதியினர் என்ற ஜாபிதாவில் வெள்ளைக்காரர் நம்மைக் குறிப்பிடவில்லையே. கூர்க்கரையும் சீக்கியரையும், பஞ்சாபியரையும் பட்டாணியரையும் ராஜபுத்திரரையும் மகாராஷ்டிரரையும் அவர்கள் பரம்பரை—வீரர்கள் என்று ஒப்புக் கொள்ளுகிறர்கள். விஜய நகர மகாராஜ்யத்தைக் குறித்த ஆராய்ச்சிகளால் தெலுங்கர் வீரமும் துலங்கி வருகிறது. ஆனல் தமிழர் வீரம் தமிழ் நாட்டிலும் மூடு மந்திரமாகத் தானே இருக்கிறது!" என்று ஓர் எதிர்ப் பிரசங்கமே செய்து விட்டார். அந்தப் பிரசங்க மழையிலும் குளிரிலும் இடியிலும் நடுங்கிப் போனர் கிராம வாசி.

நான் சொன்னேன்; "இந்த விபரீத நிலைமை இப்போது மாறி வருகிறது. 'வெள்ளைக்காரன் வாக்கே வேத வாக்கு' என்ற மூட நம்பிக்கையும் குறைந்து வருகிறது. சில நூற்றண்டுகளுக்கு முன்புகூட தெலுங்கு நாட்டின் ஒரு பகுதியும் தமிழ் நாடாக இருந்தது—என்று சரித்திரம் ஒப்புக் கொள்ளுகிறது. 'ஆந்திர' நண்பர்கள் கோபித்துக்கொள்வார்களே!' என்று சரித்திரமும் பயந்து பொய் சொல்லுமா? மலையாளப் பிரதேசமோ அசல் தமிழ் நாடுதான். ஒரு காலத்தில் மலேயா, ஜாவா, சுமத்திரா முதலிய வெளி நாடுகளின் பகுதிகளும் தமிழர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன. இந்தச் சரித்திர உண்மையைத் தான் பாரதியார் எவ்வளவு உத்ஸாகமாகப் பாடியிருக்கிறர்! அந்தப் பிரதேசங்களில் சமீப காலத்தில் தமிழர்கள் பெரும்பாலும் கூலிகளாகவும் குமாஸ்தாக்களாகவும் போயிருந்தார்கள். அந்த காலத்திலோ நம்முடைய முன்னேர் அந்த நாடுகளிலே வியாபாரிகளாகவும் சஞ்சரித்தார்கள்; வீரர்களாகவும் சஞ்சரித்தார்கள். இப்படி நான் பேசவில்லை; சரித்திரம் பேசுகிறது! இந்தப் பேச்சின் வன்மையெல்லாம் இதன் உண்மை தான்: இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள் தமிழர் சோர்வுக்கும் மருந்து; தங்கள் அவநம்பிக்கைக்கும் தக்க மருந்து!" என்றேன்.

நகர நண்பரோ,"என்ன ஸார் ஏதோ பழங்கதை தானே படிக்கிறீர்கள்? இந்தக் காலத்து வெடி குண்டுகளுக்கும் பீரங்கிகளுக்கும் முன்னே அவர்களால் நிற்க முடியுமா?" என்று கண்ணைச் சிமிட்டினர், நான் அந்த இகழ்ச்சிக் குறிப்பைக் கவனியாதவன் போல் அமைதியாகவே, "தற்கால வீரர்களைக் காட்டிலும் அவர்களைச் சிறந்த வீரர்கள் என்று கூட மதிக்கலாம்" என்றேன். உடனே கிராம வாசி, "அதெப்படி?" என்று மறுபடியும் துள்ளினர். நகர வாசியும் "எனக்கு விளங்க வில்லையே!" என்று அவநம்பிக்கையுடன் கையை விரித்தார்.

நான் மறுபடியும் சொன்னேன்: "தற்காலப் போர் வீரர்கள் போர்க் கருவிகளையே பெரிதும் நம்புகிறர்கள். வெடி குண்டுகளாலும் பீரங்கிக் குண்டுகளாலும், விஷப் புகைகளாலும் விஷமப் பிரசாரங்களாலும், இராஜ தந்திரங்களாலும் மூடு மந்திரங்களாலும் வெற்றி பெறுவதற்கு விசேஷ வீரம் வேண்டுமா? இந்நாளிலே (போர்க் கருவிகளைக் குவித்துக் கொள்ளக் கூடிய) பணப் பையின் நீளமும், சூழ்ச்சிகளின் அகலமும் ஆழமும் போரை வெற்றி பெற முடித்துவைக்க முடியுமே! வீர உடலுக்கும் மற நெஞ்சுக்கும் தான் அதிக வேலை இல்லையே! பழைய தமிழரோ வாள் வலியைக் காட்டிலும் தோள் வலியை நம்பினர்கள். வில் வலியைக் காட்டிலும் மன வலியை மதித்தார்கள். அந்தப் படைத் தலைவர்கள் படை வீரர்களைப் "போ" என்று சொல்லாமல் 'வா என் பின்னே' என்று கூவி அழைத்துக் கொண்டே முன்னணியில் போய் நின்றர்கள். அவர்கள் தங்கள் படை வீரர்களுக்குக் கவசமாக அமைந்தார்கள்; படை வீரர்களைத் தங்களுக்குக் கவசமாகக் கொள்ளவில்லை—என்று பழைய தமிழ்க் கவி பாடுகிறர். அது வீரமா? படை வீரர்களைத் தங்கள் ரட்சைக்காகப் பலி கொடுப்பது தான் வீரமா?"

நல்ல மருந்துதான்

நகர நண்பர் குறுக்கிட்டு, "அப்படியானல், போர் வீரம் தான் வீரம் என்கிறீர்களா?" என்று வெடிகுண்டு போடுவது போல் ஒரு புதிய கேள்வியைத் தூக்கிப்போட்டார். உடனே நான், "அப்படிச் சொல்லவில்லையே; பழந் தமிழர்கள் சிறந்த போர்வீரர்கள் என்றுதானே சொன்னேன். 'வாழ்க்கையே ஒரு போராட்டந்தான்' என்ற இயற்கைத் தத்துவத்தையும் அவர்கள் கண்டு கொண்டார்கள். எந்தப் போராட்டமும் அதர்ம முறையிலேதான் நிகழ வேண்டும் என்பதில்லையென்றும் உணர்ந்துகொண்டார்கள். வெள்ளைக்காரர் குறிப்பிடும் வீர இந்தியர்களில், சீக்கியரையும் ராஜ புத்திரரையும் மகாராஷ்டிரரையும் உயர்ந்த லட்சியம் உள்ளவர்கள் என்று சொல்லலாம். அவர்களிலும் ராஜ புத்திரர்களே தர்ம வீரர்கள், சுத்த வீரர்கள் என்கிறேம். பழந்தமிழர்களும் வீர தர்மத்தை உணர்ந்து, தர்ம வீரர்களாகவும் சுத்த வீரர்களாகவும் வாழ முயன்றர்கள்" என்றேன்.

இதே போக்கில் சம்பாஷணை நடந்து கொண்டிருக்கும்போது கிராமவாசி திடீரென்று, "அதென்ன, தெருவில் கூட்ட

(அடுத்த பக்கம்)

(முன் பக்கத்தொடர்ச்சி)

மும் கூக்குரலும்?" என்று கூவிக்கொண்டே எழுந்தார். தாங்கள் வெளியே போய்ப் பார்த்தோம். சில பெண்கள் படபடத்து ஓடிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் ஒருவர், "அதோ வருகிற ஸோல்ஜர்களைக் கண்டுதான் அவர்கள் அவ்வளவு வேகமாய்ப் போகிறர்கள்! என்று சிரித்தார். அந்த ஆண் பிள்ளைகளில் ஒருவருக்காவது ஓடுகிறவர்களை நோக்கி, "அவர்களைக் கண்டு நீங்கள் ஏன் ஓடவேணும்?" என்று கேட்கத் தோன்றவில்லை. அப்போது நகர நண்பரும் சிரித்தார்."இதுவும் தமிழர்களின் தர்ம வீரம்தானே?" என்று. "இந்த விஷயத்தில் உங்கள் பட்டணமும் எங்கள் பட்டிக்காடும் ஒன்றுதான்; ஒற்றுமைதான்!" என்று கிராம வாசியும் சிரித்தார்.

எனக்கோ கண்ணும் கலங்கி, கருத்தும் கலங்கி விட்டது. "இந்த நோய்களுக்கும் மருந்து உண்டோ? இப்படிப் பட்ட தமிழர்களுக்கும் இனி உய்ய வழி உண்டோ?" என்று என் பகுத்தறிவும் என்னைப் பரிகசிக்கத் தொடங்கியது. உடனே வீர சொர்க்கத்தில் வீற்றிருக்கும் செந்தமிழ்ப் பெரு வீரர்கள் என் மனக் கண் முன் தோன்றினர்கள்! "எங்கள் வீர சரித்திரத்தை ஒருவாறு பிரசாரம் செய்து பார்: தமிழ் நாட்டில் மறுபடியும் வீர உணர்ச்சியை வளர்க்கமுடியாதா? என்று முயன்றும் பார்க்கலாகாதா? முயற்சிக்கும் இகழ்ச்சி உண்டோ? மருந்து நல்ல மருந்துதான்!" என்றெல்லாம் அவர்கள் மௌனப் பிரசங்கம் செய்து மன்றடுவது போல எனக்குத் தோன்றியது.

இலங்கை-மேல் நாடு உறவு

★

புயலால் விளைந்த விபரீதம்

★

(நாயுனர்)

பெரும் புயல் ஊழிக் காற்றேபோல் யாவையும் சிதறவடித்துவிடுவதுபோல வீசிக்கொண்டிருக்கிறது. கடல் கொந்தளித்து,குமுறி பேரிரைச்சலுடன் விண்ணுடன் ஒன்றுக எண்ணுவதுபோல், பெரும் அலைகள் எழத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. எழுந்த அலைகள் முயற்சி வீணுவதும் பாதாளத்தில் வீழுவதுபோல் விழுந்து சுழன்றுகொண்டிருக்கின்றன. அலைகளின் சுழற்சியிலும், புயலின் வேகத்திலும் அகப்பட்ட எதுவும் அழிந்தொழிந்து சிதையாதிருக்கமுடியாது.

இயற்கையின் இப்பயங்கரக் காட்சி கண்டு நடுநடுங்கிக் கொண்டு இலங்கைக் கடற்கரையோரம் ஒரு சிறு கிராமத்து மக்கள் கடல் நோக்கி நின்றுகொண்டிருந்தனர். புயல் வேகத்தால் அவர்கள் உடலும் உள்ளமும் உட்பட்ட நிலை எளிதில் கூறுந் தரத்ததன்று.

ஊழிமுடிவேற்பட்டு விட்டதோ யென்றெண்ணும்படி புயல் வீச்கையில், அலை எழுந்து விழும்பொழுது கொந்தளிக்கும் கடலில் ஒரு பெரிய பாய்க் கப்பல் பாய் இழந்து, பாய் மரங்களில் சில முறியுண்டு, பம்பரம் போல் சுழன்றுகொண்டு பெரு வேகத்துடன் கரை நோக்கி வந்துகொண்டிருந்ததே அம்மக்கள் இயற்கையின் பயங்கரத்தையும் பொருட்படுத்தாது அங்கு நின்றிருந்ததற்குரிய காரணமாகும்.

கரை தட்டிய கப்பல்

சிறிது நேரத்தில் பெரு வேகத்துடன் அக் கப்பல் வந்து கரை தட்டிச் சாய்ந்து முறிந்தது. கரையிலிருந்த மக்கள் கடலோரமாக தங்களையும் மறந்து, அபாயத்தையும் பொருட்படுத்தாது சென்று அக்கப்பலுக்கு ஏற்பட்ட சேதத்தையும் அதிலிருந்த மக்களின் பேராபத்தையும் கருதிப் பார்த்துக்கொண்டிருந்தனர். கப்பலை உடைக்கவே அடித்ததுபோல புயல் வேகமும் உடனே குறைந்து கடல் கொந்தளிப்பும் குறைந்தது.

அதுவரை அக்கப்பலிலேயே தொத்தியிருந்த அக்கப்பலில் வந்த மக்கள் பெருஞ் சங்கடத்துடன் நீந்தி கரை நோக்கி வந்தனர். இயற்கையின் கோரத்தில் அகப்பட்டு தத்தளித்த அம்மக்கள் தாங்கள் சேரும் கரையிலிருக்கும் மக்கள் தங்களை என்ன செய்வர், அவர்கள் நரமாம்ச பக்ஷிணிகளாயிருந்தாலென்செய்வதென்ற அச்சம் ஒரு புக்கம் உந்தவும்; எது வரினும் வரட்டும் என்று பெருங் களைப்புடன் கரை சேர நீந்தி வந்து கொண்டிருந்தனர்.

கரையிலிருந்த மக்களும் கடலில் வீழ்ந்து கயிறுகளுடன் நீந்திச் சென்று, அவர்களிடம் கயிறுகளைக் கொடுத்து, கரையிலிருந்தவர்கள் கயிறுகளை இழுக்கப் பத்திரமாகக் கரை சேர்ந்தனர்.

கரையிலிருந்த மக்கள் வந்தவரின் நிறத்தைக் கண்டு வியப்பெய்தினர். வந்தவர்கள்முழுதும் வெள்ளை நிறத்தவராயிருந்தனர். தெரியாத பாஷை பேசினர். எனினும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. அவர்களுக்கு அபயங் கொடுத்து, உணவும் உடையும் அளித்து அவர்கள் பயத்தைப் போக்கி, அவர் தங்கள் சகோதரர்களை நடத்துவதே போல நடத்தினர்.

1505-ல் போர்த்துகேசியர்

இவ்விதம் இலங்கை வந்து சேர்ந்தவர் யார்? போர்த்துக்கேசியர். அல்மெய்டா என்பவர் அக்கப்பல் தலைவராய் வந்து சேர்ந்தவர். காப்பாற்றிய மக்களால் அவர், கொழும்பு அரசர் முன்பு அழைத்துக் கொண்டு போகப்பட்டார். அவர் அவருக்கு வேண்டிய உதவிகள் அளித்தார். அவர் கப்பல் வந்து மோதிய சிறிது நேரத்திலேயே அவர் கப்பலுடன் வந்த, வேறு கப்பல்களும் அதிகச் சேதப்படாமல் அங்கு வந்து சேர்ந்தன.

அல்மெய்டா தாங்கள் வியாபாரிகளென்றும் தங்கள் தேசம் மேற்கே வெகு தூரத்திலிருக்கிறதென்றும் அரசரிடம் எடுத்துக் கூற, அரசன் அவரைப் பெரிதும் பாராட்டி, வியாபார வசதிக் குரிய இடமும் அளித்து என்றும் தொடர்பிருந்து வரட்டுமென அன்புடன் கூறினன்.

இலங்கையின் இச்சரித்திர ஆரம்பத்தைப்பற்றி ஆசிரியர் ராபர்ட்பெர்ஸிவல் ரசமாகக் குறிப்பிட்டுள்ளார்.

"பெரும் புயலால் தற்செயலாக இலங்கையின் துறைமுகமொன்றுக்கு உந்தப்பட்டு வந்த அல்மெய்டா, அங்கிருந்த மக்களால் பேரன்புடன் ஆதரிக்கப் பட்டார். அவர் இலங்கை அரசர் முன்பு அழைத்துச் செல்லப்பட்டார்."



இது பின்னர் விருத்தியாகி இலங்கைக்கும் போர்த்துக்கலுக்கும் இடையே வியாபாரம் பெருகியது. இங்கிருந்து இலவங்கப்பட்டையே கொண்டுபோகப் பட்டது. வந்தவரின் வலிமையைப் பார்த்து, படையெடாமல் தடுப்பதற்காக அரசர் வருடமொன்றுக்கு 250000 பவுண்டு இலவங்கப்பட்டை கொடுக்க ஒப்புக்கொண்டார்.

அல்மெய்டாவின் தலைமையில் வியாபாரம் பெருகியது. இலவங்கப்பட்டை வியாபாரத்தில் கிடைத்த பெரும் லாபத்தைக் கொண்டு அவர் அங்கு வியாபார நிலையமொன்று ஸ்தாபித்தார். அதுவரையிருந்த நிலைமைபற்றி ஆசிரியர் கூறுவதாவது:—

"கடற்கரையிலிருந்த செல்வங்கள் அப்பொழுது அன்னிய நாட்டு படையெடுப்புக்களால் கொள்ளை கொண்டு போகப் படாமலிருந்தது. அவர்களது அரசர் கொழும்பில் தமது அரசாட்சியை நடத்திவந்தார்".

100 வருஷ யுத்தம்

வெளிநாட்டினரால் நாடு சுரண்டப்படுவதையறிந்த இலங்கை மக்களிடை அருவையும் ஆத்திரமும் ஏற்பட்டது. இதுமுதல் இருவரிடையே போராட்டம் தொடங்கியது. உள்நாட்டு மக்கள் பொதுவாக கடலோரத்திலிருந்து உள்நாட்டுக்கு விரட்டப்பட்டனர். போர்த்துக்கேசியரின் மதவெறியாலும் மதமாற்ற முயற்சியாலும் அப்போராட்டம் தொடர்ந்து ஒரு நூற்றண்டு நடைபெற்றது. ஆசிரியர்பெரும் ரத்தப் போராட்டம் நூறு வருடம் நடைபெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

டச்சு பிரிட்டிஷ் தொடர்பு

அதன்பின்னர் 17-வது நூற்றண்டில்டச்சுக்காரர் வந்தனர். அவர்கள் உதவியால் போர்த்துக்கேசியர் விரட்டப்பட்டனர், டச்சு ஆதிக்கம் ஏற்பட்டது. செல்வத்தைப் பெருக்குவதைத் தவிர வேறென்றிலும் அவர்கள் கவனம் செலுத்தவில்லையென ஆசியர் கூறுகின்றர்.

1797-ம் வருடத்தில் பிரிட்டிஷ் படை இலங்கையில் இறங்கியது. அதுமுதல் பிரிட்டிஷ் ஆதிகத்திலிருந்து வருகிறது.

இலங்கையில் அப்பொழுது இறங்கிய படையின் தளகர்த்தரே ஆசிரியராவார். அவர் இலங்கையின் இயற்கை அமைப்புபற்றிக் குறிப்பிடுவதாவது:- "இத்தீவு வர்த்தகத்திற்கும்,அரசியலுக்கும் எவ்வளவு முக்கியமென்பதை நான் அறிந்ததால், இது எக்காரணத்தைக் கொண்டும் வருங்கால சமாதான உடன்படிக்கையில் கைவிட்டு விடப்படமாட்டாது என்ற நம்பிக்கை எனக்கேற்பட்டது."

இயற்கையின் கொந்தளிப்பால் 16-ம் நூற்றண்டில் மேல் நாட்டு உறவேற்பட்டது. அதுமுதல் இதுவரை இத்தொடர்பு வந்திருக்கிறது. இலங்கையின் முக்கிய நிலைமை இப்பொழுதும் உணரப்பட்டு வருகிறது.

வெள்ளிக் கூஜா

(11-ம் பக்கத்தொடர்ச்சி)

பெரியசாமிக்குக் கோபம் வந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. "நீ ரொம்பக் கெட்டிக்காரன் தான்—பேச்சில். தெரியும் எனக்கு" என்றான்.

"பாக்கறயா? சரி...கூஜாவை இப்படிக் கொடு. நீ சற்று இங்கேயே இரு. நான் போய் அந்த முட்ட கோஸையும், பட்டாணியையும் டொமடோவையும் கொண்டுவந்து விடுகிறேன்....."

"கூஜா?"

"கூஜாவையுந்தான்... அதை விட்டுவிடுவேனா? பார்...இல்லாவிட்டால் என் பெயர் துரைசிங்கமில்லையடா தம்பி..." என்று மீசையில் கை போட்டான் துரைசிங்கம்.

"பேச்சுத்தான்" என்றான் பெரியசாமி.

"பார்க்கலாமே...இரண்டே நிமிஷத்தில் வரேன். கூஜாவை இப்படி என் பையனிடம் கொடு. அதை மறைத்து வைத்துக்கொள்ளடா பயலே! நீ இங்கேயே இரண்டு நிமிஷம் நில்லு, பெரியசாமி. பயலே, பேசாமல் என் கூட வா" என்று சொல்லிவிட்டுத் துரைசிங்கம், பையன் கூஜாவுடன் பின்தொடர, கம்பீரமான நடை போட்டுக்கொண்டு மருதவாணன் விட்டை நோக்கி நடந்தான்.

மாஜிஸ்டிரேட்டின் மனைவி சமையலறையில் ஆக வேண்டிய காரியங்களைப் பார்ப்பதில் ஈடுபட்டிருந்ததால், துரைசிங்கம் அவளுக்காக நாலைந்து நிமிஷங்கள் காத்திருக்க வேண்டியதாயிற்று. அவள் வந்தவுடன் அவளிடம் தான் யார் என்று துரைசிங்கம் அறிவித்துக்கொண்டான். நான் ரகஸியப் போலீஸைச் சேர்ந்தவன்; உடுப்பணியாமல் ரகசியமாகச் சென்று திருடர்களைப் பிடிப்பதற்கென்று நியமிக்கப்பட்டிருந்த ஸ்பெஷல் அதிகாரி. ஒரு பக்காத் திருடன் அன்று காலையில் வெகு துணிகரமாக மாஜிஸ்டிரேட்டின் வீட்டிலேயே பட்டப்பகலில் ஒரு வெள்ளிக் கூஜாவை அடித்துக்கொண்டு போகப் பார்த்துவிட்டானே!" ஆனால் அவன் என்னைத் தப்பிவிட முடியுமா?" என்றான் துரைசிங்கம். "இதோ கூஜா. உங்களுடையதுதானே, பாருங்கள். மாஜிஸ்டிரேட்டால் அனுப்பப்பட்டதாகச் சொல்லிக்கொண்டு ஒரு திருட்டுப் பயல் வந்து ஒரு முட்ட கோஸையும், ஒரு வீசை டொமாடோவையும், பட்டாணியையும் கொடுத்துவிட்டு, நூறு ரூபாய் பெறுமான இந்தக் கூஜாவை நகக்கெடுத்து வருவதாகச் சொல்லி கால் மணி நேரம் முந்தித்தான் வாங்கிக் கொண்டு போனான்—இல்லையா அம்மணி" என்றான் துரைசிங்கம்.

அம்மணி அப்படியே திகைத்துப்போய் விட்டாள். இந்த மாதிரித் திருட்டுக்கள் பல நடப்பதுண்டு என்று அவளும் கேள்விப்பட்டிருந்தாள். ஆச்சரியத்தால் ஒன்றும் சொல்ல மாட்டாமல் 'போலீஸ் அதிகாரி' துரை சிங்கத்தையும், அவன் கையிலிருந்த கூஜாவையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே நின்றாள்.

"அவன் ஜபம் எங்களிடம் சாயுமா? அவனைப் பிடித்துக் கொட்டடியில் அடைத்தாகிவிட்டது. கூஜாவையும் கைப்பற்றிவிட்டேன். கூஜாவும் அவன் உங்களிடம் கொடுத்த கறிகாயும் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படவேண்டும். அந்த கறிகாயும் திருட்டுச் சொத்துத்தான்" என்று மேலும் சொன்னான் துரைசிங்கம்.

"எனக்கு அப்பவே சந்தேகமாய்த்தானிருந்தது அவனைப் பார்க்கிறப்பவே....." என்று ஆரம்பித்தாள் மாஜிஸ்டிரேட்டின் மனைவி.

"நாழியாறது, அந்தக் கறிகாயையும் தந்தால்...." என்றான் துரைசிங்கம். "கூஜாவும் எங்களிடமே இருக்கட்டும் விசாரணை முடிந்ததும் அனுப்பி விடுகிறோம்."

"நல்லவேளை. நான் முட்ட கோஸை நறுக்கத்தான் உட்கார்ந்தேன். அதற்குள் நீங்கள் வந்து காத்திருப்பதாக வேலைக்காரி சொன்னாள்; வந்து விட்டேன் நல்ல வேளை" என்று சொல்லிக்கொண்டே மாஜிஸ்டிரேட்டின் மனைவி, சமையலறையிலிருந்து கூடையில் அந்தக் கறிகாயைப் போட்டுக் கொண்டு வந்து 'ரகஸியப் போலீஸ் அதிகாரி' துரைசிங்கத்துடன் வந்திருந்த பையனிடம் கொடுத்து விட்டாள்.

"எல்லாவற்றையும் கூடிய சீக்கிரமே திருப்பிக்கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு துரைசிங்கம் கூடையில் கறிகாயுடனும், கையில் வெள்ளிக் கூஜாவுடனும் பையன்பின் தொடர, வெளியேறினான்.....

துரைசிங்கமும், பெரிய சாமியும் அதற்குப் பிறகு எங்கே எப்பொழுது சந்தித்தார்கள், என்னென்ன பேசிக்கொண்டார்கள். எப்படி அந்தச் 'சொத்தை' பங்கு போட்டுக்கொண்டார்கள் என்பது தெரியாது!

நியாயம் வழங்கி விட்டு மத்தியானம் அவசரம் அவசரமாக வீடு திரும்பியதும், நடந்ததை எல்லாம் மனைவி சொல்லக் கேட்டு மாஜிஸ்டிரேட் மருதவாணன் என்ன சொன்னார் என்ன செய்தார் என்பதும் தெரியாது!

[பெயர்களும், கதை அமைப்பும் கற்பனை.]

குண்டலகேசி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்வாரோ என்று பத்திரை கவலையுற்றாள்.

பேச்சுத் திறமையும், முன்னறிவும் உடையவள் வசந்தி. அவளுக்கு இருபது வயது இருக்கும்; தவிர ஒரு கைம்பெண் அவள். ஆடவர் போக்கையும் பெண்டிர் போக்கையும் அளந்தறிந்தவள். பத்திரையின் உள்ளக்குறிப்பை உணர்ந்தேதான், ஸத்துகனிடம் சென்றாள். 'கிளி வேண்டுமென்றால் அதைப் போன்ற ஆயிரம் கிளிகள் கூடப்பெறலாம். ஆனால், ஸத்துகனைப் பெறமுடியுமா?' என்று எண்ணியே அவனிடம் சென்றாள்.

வசந்தியின் வருகையை எதிர்பார்த்தே அங்கு அவன் உட்கார்ந்திருந்தான். ஸத்துகனின் கம்பீரத் தோற்றத்தைக்கண்டு வசந்திக்கு நாணம் மிகுதியாயிற்று. பெண் பிறப்பிற்கு நாணம் இயல்புதானே. எனினும் சிறிது தைரியமுடன், அவனைக் கைகுவித்து வணங்கினாள். கிளியையும் அவனையும் மருள மருளப் பார்த்தாள். உயிரற்ற கிளி என்பது தெரிந்ததும் அவளுக்கு வியப்பாகவே இருந்தது.

"இந்தக்கிளி, உயிரற்றதா?"

"ஆம், உயிரில்லாத ஒன்றுதான் குறை"

"விலைக்குக் கொடுப்பதா?..." என்று புன்னகையோடு இழுத்துப் பேசினாள்.

"ஏன் இதைப் பெறுவதில் ஆவல் உண்டோ?"

"ஆம், என் தோழி, அதோ கூடாரத்தில் இருக்கிறாள். அவள் விரும்புகிறாள்"

"அவ்விதமானால், இதோ தருகிறேன்,....அந்நங்கை பெயர் என்ன?"

"பத்திரை என்று சொல்லுவார்கள். ஏனாதிமுதுநாயகனுடைய புதல்வி; இளமையிலேயே தாயை இழந்தவள். கன்னிமாடத்தில் விரதம் கொண்டுள்ளாள். இந்திரவிழாவில் நாள்தோறும் காமன் கோட்டத்தில் காமனை வணங்க வந்து செல்கிறாள். நான் அவளுடைய தோழி. தாங்கள் கூடாரத்திற்கு வந்தால் இதற்குரிய விலையைக் கொடுத்துப் பெற்றுக் கொள்வாள்"

பத்திரைக்குப் பரிசு

"அப்படியே வருகிறேன். நீ முன்னேபோ" என்று கூறிவிட்டு எழுந்தான். நாணத்துடன் வசந்தி முன்னே சென்றாள். கூண்டுக் கிளியைக் கையில் எடுத்துக்கொண்டு பின்னே சென்றான் ஸத்துகன். ஸத்துகன் வரவைக் கண்டதும் கூடாரத்திற்குள் ஒதுங்கி நாணி நின்றாள் பத்திரை. வசந்தி முன்னே சென்று ஸத்துகன் வரவை அவளுக்குக் கூறிவிட்டு ஒதுங்கி நின்றாள். ஸத்துகன் கூடாரத்தில் புகுந்து முகப்பில் நின்று கொண்டான். யுவகனைக் காண்பதிலும், பேசுவதிலும் அதிக ஆவல் கொண்டிருந்த அவள் எக்காரணத்தாலோ மெய்நடுங்கித் தலைகுனிந்து நின்றாள். அவளை மீறிய வேட்கையால், அவள் கண்கள் அச்சமும் ஆர்வமும் நிறைந்து ஸத்துகனை மருண்டு மருண்டு நோக்கின. புன்னகையோடு ஸத்துகன் அவளை நோக்கினான். கண்ணொடு கண்ணிணை நோக்கின. காதலர் உள்ளம் கலந்தனர். கிளியின் மீது தன் நோக்கத்தைச் செலுத்தினாள் பத்திரை. "இந்தக் கிளியை விரும்பினால் கொடுக்கிறேன். விலைக்கு வாங்காத பொருளை விலையில்லாமலே கொடுக்கிறேன்" என்று கூறி இரு கைகளாலும் அதை ஏந்தி நின்றான். அதற்குமேல் பத்திரைக்குத் தைரியம் உண்டாயிற்று.

"தாங்கள் இதை எங்கே பெற்றீர்கள்; இந்தக்கிளி, உயிரற்றதா?" என்றாள்.

"உயிரற்ற கிளிதான். எனக்கு இந்நகரில் உள்ள வணிகர்களெல்லாம் நண்பர்கள். அயல் நாட்டிலிருந்து இங்கு வாணிபம் செய்யவந்த யவனர், துருக்கர், சீனர், சாவகர் முதலியவர்களும் எனக்கு நண்பர்கள். அவர்களில் யவனத்தச்சன் ஒருவன். அவன் ஞாபகார்த்தமாக இதை எனக்கு அளித்தான் என் ஞாபகமாக இதை நான், அளிக்கிறேன்" என்று கிளியை நீட்டினான். அதை வாங்காமல் எப்படி இருக்க முடியும்? சிறிது நாணத்துடன் முன்னே நடந்து கைகளை நீட்டி வாங்கிக் கொண்டாள். அவன் கைவிரல்கள் சிறிது பட்டுவிட்டன. அவள் உடல் சிலிர்த்தது. ஸத்துகனின் கைவிரல்களைச் சிறிது தொடுதலிலும் அவள் இன்பம் கண்டாள். அவனும் இன்பம் கண்டான். 'கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறியும் ஐம்புலனும் ஒண்டொடியின் கண்ணே உள' என்பது உண்மையன்றோ? இருவர் உள்ளத்திலும் உணர்ச்சி வேகம் மிக்கது. சிறிது வாய் பேசாது நின்றனர். பலநிற வர்ணம் கொண்ட மெல்லிய ஆடை பத்திரையின் அங்கலாவண்யத்தை மிகவும் அழகு செய்தது. மாலை இளந்தென்றல் வீசுதலால் அவள் மேனியில் அங்கங்கே திளைத்துக்கொண்டிருந்தன. ஆடையும் அணிகளும், அந்தக் காட்சியைக் கண்டு நகையுடன் நின்றான் ஸத்துகன்.

"நாழிகை ஆகிவிட்டது....." என்று சிறிது நகர்ந்தான் ஸத்துகன். உடனே பத்திரை திடுக்கிட்டாள். சிறிது முன்னே வந்து நின்றாள்.

"தாங்கள் எங்கு இருக்கிறீர்கள்?"

"நான் வணிகர் வீதியில்தான் இருக்கிறேன். உங்கள் மாளிகையிலிருந்து ஒரு காதத்திற்கு அப்பால் என் மாளிகை இருக்கிறது. ஏனாதி பெருஞ்சாத்துவனுக்கு யான் புதல்வன், ஸத்துகன் என்று என்னை அழைப்பார்கள்."

இந்தாருங்கள் மோதிரம்

அப்போது சிறிது வியப்புடன் ஸத்துகனையும் பத்திரையையும் நோக்கினாள் வசந்தி. "என் ஞாபகமாக இந்த மோதிரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன்" என்று தன் கைவிரலாழியைக் கொடுத்தாள் பத்திரை. அருகில் சென்று அதை வாங்கிக்கொண்டான். அப்போது வசந்தி கூடாரத்திற்கு வெளியில் சென்று எங்கோ நோக்கி நின்றாள். ஸத்துகன் பத்திரையின் காதோடு ஏதோ கூறுவது போல் தோன்றியது. பத்திரையின் கண்களும் கன்னங்களும் சிவந்தன.



கனடா விமானப்படையைச் சேர்ந்தவர்கள் அமெரிக்கா விமானப்படையுடன் பஸிபிக் கிழக்குப் பிரதேசததில ரோந்து சுற்றி காவல் புரிகின்றனர் படத்திலுள்ள 5 விமானங்களும் பனி படர்ந்த பகுதியில் சஞ்சரிக்கின்றன.

"நாளைக்கு மறுபடியும் சந்திக்கிறேன்" என்று கூறிவிட்டு கூடாரத்திற்கு வெளியே வந்தான். பத்திரை மருண்டு நோக்கினாள். ஸத்துகன் விரைவாகக் குதிரையிருக்குமிடம் சென்று அதில் உட்கார்ந்து கடிவாளத்தை இழுத்துப்பிடித்தான். குதிரையின் வேகம் பத்திரையையும் வசந்தியையும் பிரமிக்கச் செய்தது. அவன் சென்ற திசையையே நோக்கினாள் பத்திரை. அவ்வுருவம் கண்களுக்கு மறைந்த பின் தலை குனிந்தாள். அவள் கண்களிலிருந்து இரண்டு நீர்த்துளிகள் நிலத்தில் விழுந்தன. கடலின் கொந்தளிப்பும், முல்லை மலரின் நறுமணமும், சுற்றிலும் கேட்கின்ற வீணையொலி, வேய்ங்குழலொலி மதுரகானம் முதலியனவும், மெள்ள, மெள்ள வீசுகின்ற மந்தமாருதமும் அவள் உள்ளத்தைக் கலக்கி உணர்ச்சி வேகத்தை எழுப்பின. அவைகள் துணைபிரிந்த காதலருக்குத் துன்பம் தருவதன்றோ?

நீண்டபெருமூச்சுவிட்டுக் கொண்டு தோழியை நிமிர்ந்து பார்த்தாள். நிகழ்ந்ததெல்லாம் கனவுபோலத் தோன்றியது அவளுக்கு.

"வசந்தி, அவருடன், நான், இவ்வளவு மன உறுதியுடன் பேசியதும், நடந்து கொண்டதும் எனக்கே வியப்பை அளிக்கிறது. அவரைக் கண்டவுடன் என் உள்ளம் அவர் வசமாகிறது. நீண்ட நாட்கள் பழகியவர்போல் அவரிடம் அன்பு மிகுதியாகிறது. அவரைக் காணாதபோது, எப்போது காண்பேன்" என்று மனம் ஏங்குகிறது.

"பத்திரை, காதலர் உள்ளம் இவ்வாறு கலங்குவது இயல்பே. அதிலும் பெண்டிர் உள்ளம் பெரிதும் கலங்கும். நாழிகை ஆகிவிட்டது. அவரும் சென்றுவிட்டார். காமன் கோட்டம் போய் மீளவேண்டும்" என்றாள். "ஆம், வா, போவோம்" என்று கூறிப் பத்திரை புறப்பட்டாள். வசந்தி, பூ முதலியவற்றை எடுத்துக்கொண்டு பத்திரையுடன் காமன் கோட்டம் சென்றாள். காமதேவனை வணங்கிவிட்டு விரைவில் திரும்பினர், இருவரும் நன்றாக இருள் பரவிவிட்டது. இருவரும் சிவிகையில் அமர்ந்தனர். யவன வீரர்கள் கூடாரத்தைக் கலைத்து அவற்றைச் சிவிகையில் வைத்தனர். மல்லர்கள் சிவிகையைத் தாங்கி விரைந்து சென்றனர்.

சிவிகை செல்லும்போதே, பத்திரையும், வசந்தியும் ஸத்துகனைப்பற்றி பேசிக்கொண்டு சென்றனர். பத்திரையின் மனத்தை மாற்றும் விஷயத்தில் முயற்சியை கைவிட்டாள் வசந்தி. வசந்தி பெண் பிறப்பினளாயினும், "பெண்ணறிவு பெரும் பேதைமையுடையது," என்பதை பத்திரை மூலமாக அறிந்துகொண்டான். ஸத்துகனைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கும் பத்திரைக்கு அவள் மனப்போக்கின்படி ஆறுதல் கூறினாள். பத்திரைக்கும் ஸத்துகனுக்கும், இவ்வளவு விரைவில் காதல் முளைத்தது பற்றி அதிசயித்தாள்.

* * * *

'மறுபடியும் சந்திக்கிறேன்' என்று கூறியபடி, மறுநாளும் சந்தித்தான் ஸத்துகன். ஏன், அன்றுமுதல் ஸத்துகன், பத்திரையைக்காணத் தவறுவதில்லை. பத்திரை, சிறிது முன்பாகவே காமன் கோட்டத்துச்சோலைக்கு வருவாள். ஸத்துகனும் வந்துவிடுவான். இருவருக்கும் பிரிய மனம் வராது. மாளிகைக்குச் செல்லும்போதும் நேரமாகிவிடும். நீண்டநேரம் பேசியிருந்துவிட்டு இருவரும் பிரிந்து செல்வார்கள். இவர்களுக்கு இடையில் வசந்தி மிகவும் சிரமப்பட்டாள். சமயம் நேரிடும்போதெல்லாம், ஸத்துகனைப் பற்றி அறிய முயற்சித்தாள் வசந்தி. அவள் முயற்சி வீணாகவில்லை.

அடுத்த வாரம்:
தலை தப்பியது.

வந்தது என்பதை அவர் நன்கு அறிவார். ஆயினும் நன்றாகத் தெரிந்தும் தம் குமாரத்தி சம்பந்தப்பட்ட விஷயத்தில் உண்மையை எடுத்துக் கூறுவதற்கு அவருக்குத் தைரியம் இல்லை. தம்முடைய உயிலிலும் அமல குமாரனுக்குத் தாராளமாக வேண்டிய பொருளை விட்டு வைத்தார்.

ஆனால் அமலனுக்கோ பணமுடை அதிகரித்துக்கொண்டே போயிற்று. முதலில் இரண்டு பேருக்கும் போதுமானதாக இருந்த தொகை அப்பால் அமலன் ஒருவனுடைய செலவுக்கே போதுமானதாக இல்லை. ஹரகண்ட பாபுவின் சொத்துக்கு சோபாராணியும் அவளுடைய சகோதரன் நித்யானந்தனும் நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதைக் கௌரியும் அவள் புருஷனும் ஆக்ஷேபிக்காமல் இல்லை. இந்த ஏற்பாட்டை மாற்றிவிட அவர்கள் கோர்ட்டில் வழக்கும் தொடுத்தனர். ஆயினும் அவர்கள் கட்சி வெற்றி பெறவில்லை. இதனால் அமலன் தன் செலவுக்கு வேண்டிய பணத்துக்குத் தன் தாயின் தயவை எதிர்பார்க்க வேண்டியதாயிற்று. ஆயினும் என்னவானாலும் பணத்திற்காக அவளுக்கு எழுதுவது என்பது முடியாத காரியம். அவன் மனது இடம் கொடுக்கவில்லை. ஆகவே இந்த விஷயத்திலும் நவகௌரங்கன் குறுக்கிட்டு பணத்தை வாங்கி அமலனுக்கு அனுப்ப வேண்டியதாயிற்று. சோபாராணி சில சமயங்களில் அவசியத்தை அறிந்து முன் பணம் கொடுத்து வந்தாளாயினும், அதைக் கொடுப்பதில் தனக்குச் சிறிதும் இஷ்டமில்லை யென்பதை நன்றாகக் காட்டி வந்தாள். கௌரியும், அவள் புருஷனும் இதைக் கண்டு இன்னும் அதிகமாக அவள் மீது துவேஷம் கொண்டனர்.

சோபாராணியின் சகோதரன் நித்தியானந்தன் ஒரு வக்கீல். அவன் நந்தகைதியில் தன் தொழிலை நடத்தி வந்தான். அவன் விஷயமாக சோபாராணிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. ஹரகண்ட பாபு உயில் எழுதும்போது தன் மைத்துனன் தன் ஊரிலிருந்துகொண்டு தம்முடைய சொத்துக்களை மேல் விசாரணை செய்து வர முடியும் என்றே எண்ணினார். அதனாலேயே அவனை நிர்வாகஸ்தர்களுள் ஒருவனாக நியமித்திருந்தார். ஆனால், நித்தியானந்தனோ தன் தொழிலில் வரும்படி சரியாகக் கிடைக்காததைக் கண்டு தன் கவனம் முழுதையும் ஹரகண்ட பாபுவின் சொத்துக்களின் மீது செலுத்தினான்.

நித்தியானந்தன் ஜமீனில் இருந்த பழைய வேலைக்காரர்கள் எல்லோரையும் விலக்கிவிட்டான். அவர்கள் ஸ்தானத்தில் தனக்கு வேண்டியவர்களைக் கொணர்ந்து நியமித்தான். தன் சகோதரியிடம் அவன் இந்தக் காரியங்கள் யாவும் பின்னால் அவளுடைய நன்மைக்காகவே தான் செய்வதாகவும் சொல்லி வந்தான். அவளும் இதை நம்பிவிட்டாள்.

அமலனுக்குப் பணம் அனுப்ப வேண்டிய ஒவ்வொரு தடவையிலும் அவன் சோபாராணியுடன் அது விஷயமாகக் கடுமையாகப் பேசுவான். பணம் அனுப்பக்கூடாது என்று குறுக்கே விழுந்து மறித்துப் பார்ப்பான், ஆயினும் அவளுக்கு இந்த விஷயமாக உள்ள உணர்ச்சியை நன்றாக அறிவான், ஆகவே கடைசியில் அவன் விட்டுக் கொடுக்க வேண்டியே வரும். அவன் இவ்விதம் செய்து வந்ததில் பலன் இல்லாமல் போகவில்லை. அமலனுக்குச் சரியாகப் பணம் போய்க்கொண்டிருக்கும் வரையில் சோபாராணி ஜமீனில் இதர காரியங்களில் தலையிடவில்லை. ஆகவே அவற்றை நித்தியானந்தன் அவன் இஷ்டம் போல் நடத்தி வர இடம் ஏற்பட்டது.

சோபாராணி தன்னுடைய புருஷன் இறந்தது முதல் உலக விஷயங்களில் எவ்விதப்பற்றும் வைத்துக்கொள்ளவில்லை. அவள் வயிற்றில் பிறந்த குழந்தை ஏதாவது ஒன்று இருந்திருக்குமாயின் அப்போது நிலைமை வேறு விதமாகி இருக்கக்கூடும்! இந்த உலகத்தில் அவளுக்குக் கணவனுடன் தாம்பத்திய வாழ்க்கை யென்ற ஒரே பந்தம் தான் இருந்தது. அது அறுந்து போன பிறகு அவளுக்கு வாழ்க்கையில் இன்பம் அளிக்கக்கூடியது வேறு என்ன இருக்கப் போகிறது? காதலின்பம் இறந்து ஒழிந்த பிறகு உயிர் வாழ்வது எதற்காக, என்றே எண்ணி ஏங்கினாள் அவள்.

அவளுடைய மண வாழ்க்கை மிகவும் குறுகிய காலத்திலேயே முடிவடைந்தது எனினும் அதற்குள்ளாகவே அவள் உண்மைக் காதலினால் ஒரு நூற்றாண்டு காலத்தில் அனுபவிக்கக்கூடிய இன்பத்தை அனுபவித்துவிட்டாள். நடு நடுவே ஏற்பட்ட குட்டிக் கலகங்கள் அவர்கள் மனம் ஒன்றுபட்டு வாழ்வதற்குப் பெருந் தடையாக நிற்க முடியவில்லை. அக்காலத்தே அவள் தன் புருஷனுடைய உண்மை அபிமானத்துக்கு உரியவளாக இருந்ததை எண்ணிப் பெருமிதம் அடைந்து வந்தாள். அவளும் அப்படியே தன் புருஷனை மனத்தில் வைத்துப் பூஜை செய்து கொழு கிளையைச் சுற்றும் கொடியே போல வாழ்ந்து வந்தாள்.

இப்பொழுதோ அவளுக்கு மிஞ்சியது பழைய ஞாபகம் தான். தான் முன்னர் அனுபவித்த இன்பக் காட்சிகளை எண்ணி எண்ணிக் காலங்கழிக்க வேண்டியவளாகவே இருந்தாள். அந்த ஞாபகத்தை மனதில் தாங்கியே அவள் தன்னைச் சுற்றியிருந்த பிறவிஷயங்களை மறந்தாள். இவ்விதம் அவளைச் சேர்ந்தவை யாவும் அவளுடைய சகோதரன் நித்தியானந்தன் கைக்கு போயின.

நித்தியானந்தனும் தனக்கு கிட்டிய நல்ல சமயத்தை நழுவ விடவில்லை. ஹரகண்ட பாபுவுக்குச் சொந்தமான சர்வமானிய கிராமங்கள், தாலூகா தாலூகாவாக தீர்வை பாக்கிக்காக ஏலத்துக்கு வரும்படி ஏற்பட்டது. நித்தியானந்தனும் அவற்றைப் பினாமியாக (மற்றொருவர் பேரில்) வாங்கி வந்தான். இந்த திருட்டுச் சாமர்த்தியத்தால் அவன் பெரிய பணக்காரனாகி விட்டான். நந்தகைதியில் பெரிய பங்களாக்களாகக் கட்டினான்.

சோபாராணியோ பெண்களாகப் பிறந்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள கதியை நன்றாக அறிந்து கொண்டாள். அதனால் அவள் தன் குடும்பத்து ஆசாரியரிடமிருந்து மந்திரோபதேசம் பெற்றுக் கொண்டாள். அது முதல் அவள் வாழ்க்கை ஜபதபங்களிலும் பூஜை முதலியவற்றிலுமே கழிந்தது.

* * * * *

பலராம்பூரில் ராய் குடும்பத்தவர் வசித்து வந்த மாளிகை இப்போது பாழாகிவிட்டது. அதில் தேள் பாம்பு முதலிய ஜந்துக்களே குடியிருந்தன. அதனால் முன்னர் இருந்த வேலைக்காரர்கள் தோட்டக்காரர்கள் ஆகியோர் ஒருவரும் காணப்படவில்லை. கட்டிடத்தில் முன்புறத்தில் மட்டும் ஒரு பள்ளிக்கூடத்து வாத்தியார் மத்தியான வேளைகளில் பத்துப் பன்னிரண்டு பிள்ளைகளை மறித்துப் போட்டு வைத்திருந்தார். கட்டிடத்தின் மற்ற பகுதிகளில் புறாக்கள் ஏராளமாகக் குடியேறியிருந்தன. எப்போதும் அவை போடும் சப்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.

சோபாராணி இப்போது நிரந்தரமாக நந்தகைதியில் தன் சகோதரன் வீட்டோடு வசிக்கலாயினள். அவள் பலராம்பூரை விட்டுப் போக விரும்பவில்லை. ஆயினும் அவள் மட்டும் தனியாக அவ்வளவு பெரிய மாளிகையில் வசித்து வருவது சாத்தியமாக இல்லை. ஜமீன் சொத்துக்களில் பெரும்பாலனவை கை மாறிப் போய்விட்டன. அதனால் அந்தப் பெரிய வீட்டில் ஆள் மாகாணத்துடன் இருப்பதற்கு போதிய வருவாய் கிடையாது. நித்தியானந்தனிடமோ இந்தச் செலவையும், இன்னம் இதற்கு அதிகமாகவும் செய்வதற்கு வேண்டிய ரூபா இருந்தது. ஆயினும் அவனுக்குத்தன் சகோதரிக்காக அப்படிச் செலவு செய்ய வேண்டும் என்று ஏன் அவ்வளவு அக்கரை? அவளும் அவனுடன் நந்தகைதியிலேயே தங்கி விடலாமே! அதனால் பெரிய செலவு ஒன்றும் ஏற்பட்டு விடாது இந்தவிதமாகவே சோபாராணி தன் சகோதரனுடன் நந்தகைதியிலேயே நிரந்தரமாக வசிக்க நேர்ந்தது. அமலன் திரும்பி வந்துவிட்டான். ஆனால் சீமையிலே படித்துப் பாஸ் செய்து எந்தப் பட்டமும் வாங்கவில்லை. அவனுக்கு ஒரே விசாரம் ஏற்பட்டது அது தான் அன்ன விசாரம். நவகௌரங்கன் அவனிடம் நிலைமையை விவரித்துக் கூறிவிட்டான். சிரமப்பட்டுப் பார்த்தால் நித்தியானந்தன் பிடியிலிருந்து ஏதாவது கொஞ்சம் சொத்தையாவது பிடுங்கக்கூடுமோ, என்னவோ, நிச்சயமாகக் கூற முடியாது. ஆயினும் அதற்கு நியாய ஸ்தலத்திலே ஏராளமாகச் செலவு செய்ய வேண்டி வரும், அப்போதிருந்த நிலையில் அதற்குத் தேவையான பணத்தை எங்கிருந்து எப்படிக் திரட்டமுடியும்?

கௌரி என்னவோ, தன் தம்பி வியாபாரத் துறையில் இறங்கி விட வேண்டும் என்று இஷ்டப்பட்டாள். ஆனால் அமல் குமார ராய் சௌதுரி அவர்களோ பெண் பிள்ளைகளின் பேச்சைக் கேட்பதற்கு ஒருப்படவில்லை. கௌரி ஒரு பெண் பிறவிதானே. அவன் அதை அவளுக்குத் தெளிவாகக் கூறிவிட்டான். அப்பால் அவள் தன் தம்பிக்கு எந்த விதமாக உதவி செய்யமுடியும் என்பதைப்பற்றிக் கவலைப்படவே இல்லை.

(தொடரும்)

வாரா வாரம் உங்கள் கேசத்தை சீர்படுத்தும் முறைகள்
ஆடவர்களே, நீங்கள் அறியவேண்டிய முக்கியமான ஒரு விஷயம்

1 டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ ஒருபுட்டி வாங்கவும். (விலை சொற்பம் தான் - இன்றே வாங்குங்கள்.)

2 கூந்தலை (ஜலத்தில்) நனையுங்கள்.

3 ஷாம்பூவை தாராளமாக உபயோகித்து நிறைய நுரை வருமளவு தேய்க்கவும். பிறகு சுத்த ஜலம் விட்டு கூந்தலை அலசி உலர்த்துங்கள்.

4 சீப்பும் பிரஷ்ஷும் கொண்டு வாரி மினுக்கவும். இப்பொழுது உங்கள் கூந்தலின் அழகிய தோற்றத்தைக் கண்டு நீங்களே வியப்புறுவீர்கள்.

டாம்கோ தேங்காயெண்ணெய் ஷாம்பூ உங்கள் கேசத்தை மிருதுவாகவும், உறுதியாகவும், பள பளப்பாகவும் இருக்கச் செய்கிறது. எப்பொழுதும் அதையே உபயோகியுங்கள். எல்லா பிரபல கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ தேங்கா யெண்ணெய் ஷாம்பூ

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா, 1, வாரன் ரோட் பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர் :- தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி., டாடாபுரம் & பம்பாய்.

T. H. 2363

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

பாரதி-புதுவைநிகழ்ச்சிகள்

'கடவுளின் ஸ்பரிசம்'

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி.

"கண்ணன் - என் தாய்" என்ற தலைப்பில் ஸ்ரீ சுப்பிரமண்ய பாரதியார் "உண்ண உண்ணத் தெவிட்டாதே" என்ற சொற்களை முதலாகக் கொண்டு 10 அடிகளுள்ள ஓர் நொண்டிச் சிந்தை இயற்றியிருக்கிறார். அதை அவர் எப்பொழுது பாடினார் என்பதை ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி இக் கட்டுரையில் விவரித்துச் சொல்லுகிறார்.

ஓர் நாள் அதிகாலை. வஸந்த காலம் காலையில் எழுந்து கடற்கரை சென்று ஆதித்யனைத் தொழுவது என் தந்தையார் வழக்கங்களில் ஒன்று. கடற்கரை அருகேயுள்ள வீதிகளில் பிரஞ்சுக்காரர்களும், ஆங்கிலோ இந்தியரும் வசிக்கிறார்கள். பாபு அரவிந்த கோஷ் வசிப்பதும் அந்த வீதியில் தான். அங்குள்ள பங்களாக்களில் இருந்த ஒருவர் இன்னும் விழித்தெழவில்லை. ரமணீயமான ஸங்கீதம், கடலலைகளிலிருந்து கவியின் காதுகளுக்கு மட்டும் கேட்டது. அங்கு படர்ந்திருந்த கொடி, செடிகளின் புஷ்பங்கள் மலர்ந்து உஷாதேவியின் வருகையில் தங்களுக்குண்டான ஆனந்தத்தை வெளியிட்டன. கடற்கரை வழியே நடந்தோம். எங்கள் கால்களை அலைகள் வந்து நனைப்பது பிரம்மானந்தமாயிருந்தது.

தந்தை இதையறிந்து "தங்கம்மா!" கடவுள் தரிசனம் செய்வது கஷ்டம். மிகவும் கடினம். அதற்கு அநேக வருஷங்கள் கொடூரமான தபஸ் செய்யவேண்டும். அப்படியும் சிலருக்குத்தான் தரிசனம் கிட்டும். சிலர் தான் அந்த பாக்கியத்தைப் பெற முடியும் என்று ஓயாமல் கூறிக் கொண்டிருக்கிறார்களே! இப்போது இந்த மனோகரமான காலை வேளையில், நமது கால்களை இந்த அலைகள் வந்து தொடுவது எத்தனை சுகமாயிருக்கிறது? அன்னையின் அருள். கரங்களின் ஸ்பரிசம். கடவுள் தனது ஒவ்வொரு செய்கையினாலும் மனிதருக்கு இன்பத்தை அளிக்கிறான். நம் அஞ்ஞானத்தினால் அதை உணர முடியவில்லை. க்ஷயரோகி எத்தனையோ மருந்துகள் சாப்பிடுகிறான். வருஷக் கணக்கில் நோய் குணமாவதில்லை. டாக்டர் "மதனப்பள்ளிக்குப் போ" என்று உத்திரவிடுகிறார். மதனப்பள்ளியில் எதனால் நோய் குணமாகிறது. நம் ஊரிலுள்ள டாக்டருக்குத் தெரியாத மருந்தா இருக்கிறது? இல்லை. நல்ல காற்று; பிராணவாயு. அங்கு இருக்கிறது இங்கு நமது நகரங்களில் காற்றை மக்கள் அசுத்தப்படுத்தி விடுகிறார்கள். பஞ்சபூதங்களையும், கொஞ்சம்கூட யோசியாமல் மனிதர் அசுத்தம் செய்கின்றனர். காற்றை நமது முன்னோர் எத்துணைச் சிறப்பாகப் போற்றினர்! அவர்கள் ஆரோக்கியத்திற்கும், பகவத் தரிசனத்திற்கும் பாத்திரமாயிருந்தார்கள். நாம் இப்போது கடவுள் என்றால் கல்லினாகிய சிலை. அல்லது உலோகத்தினாலாகிய பிம்பம் என்று கருதுகிறோம். அதனால் இயற்கைத் தெய்வத்தை நம்மால் அறியமுடிவதில்லை. இப்போது நம் கால்களை அன்புடன் வருடுவது அலையல்ல; பராசக்தியின் கரங்கள் என்று அறி. நமது உடம்பில் படும் இந்தக் காற்று, நம்மைத் திடமடையச் செய்வதற்குத் தாய் விசிறும் இளந் தளிர் விசிறி.

"அப்பா இவைகளை விவரமாக, உன் அநுபவத்தைப் பாடல் மூலமாகத் தெரிவிக்க வேண்டும் என்றேன்" சரி. அதன் கருத்தை இப்போது சொல்கிறேன், பாட்டு வீட்டுக்குப் போய் எழுதலாமென்றார். நான் "சரி" என்றேன்.

"ஆஹா! என்னென்று புகழ்வது அன்னையின் அருளை! உண்பதற்கு எத்தனைவித உணவுப் பொருள்கள்! வயிற்றுக்குணவு கொடுத்த பின் செவிக்குணவு! கானமுதம்! உயிரைக்கூட லக்ஷியம் செய்யாமல் நமக்கு உதவுகின்ற நண்பர்கள்! பக்தியெனும் அநுபவத்தைப் பாரிலுள்ள எல்லா மாந்தரும் அறியும்படி காதல் புரிய கன்னியர்கள்; வர்ணக் களஞ்சியத்தை நான் தெரிந்து கொள்வதற்காக வானத்திலும், புஷ்பஜாதியிலும் எத்தனை வர்ணஜாலம்! பராசக்தி தனது லீலா விநோதத்திற்காக ஏற்படுத்திய வர்ண வித்யாசங்களை, மனிதர் ஜாதி வேற்றுமைக்கு உபயோகப் படுத்துகிறார்கள். வர்ணங்களும்கூட பச்சை நீலமாகும்; நீலம் பச்சையாக மாறும்; உள்ளுக்குள் சிவப்புத் தெரியும்; மேலே கண்கள் கூசும்படி ஜோதிவிட்டு ஒளி வீசும். நான் சொல்வது உனக்கு விளங்கவில்லை? வைரத்தை எடுத்துப் பார். அதை பொதுவாக வெள்ளை நிறமென்று கூறுகிறார்கள். ஆனால் வெண்மை நிறம் மட்டுந்தானா தெரிகிறது? எத்தனை நிறம் தெரிகிறது? அதைத்தான் கூறுகிறேன். வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால் அதில் மானுடர் வேற்றுமையில்லை யென்பதைத் தெரிந்து கொள்ளும்பொருட்டே தான் அன்னை வர்ணங்களை ஏற்படுத்தியிருக்கிறாள். இது மட்டுமா? பேசும் நண்பர்களை காட்டிலும் பேசா நண்பர்களை கணக்கில்லாமல் படைத்திருக்கிறாள்."

நான் "அது யாரப்பா" என்றேன். நதிகள், நக்ஷத்திரங்கள் மலைகள் (அஞ்சா நெஞ்சு படைத்து சிரம் நிமிர்ந்து, மோன நிலைமையில் நிற்கப் பழகுவதற்கு சாதகமாயிருக்கின்றன.) விருக்ஷங்கள் பரோபகாரத்தையே இலட்சியமாகக் கொண்டு நிற்கின்றன. நமக்கு ஒரேவிதமாக வாழ்க்கையிருந்தால் ருசிக்காதென்று இன்ப துன்பங்களையும், வெற்றி தோல்விகளையும் மாறி மாறி ஏற்படுத்தி மனதை மாசு நீக்கி விடுகிறாள். மனிதன் கட்டு நீங்கி விடுதலை பெறுவதற்குப் பறவையினத்தைப் பார்த்துக் கொள்ளலாம். பொய்யில்லாவிடில் மெய் சோபியாது. தீதில்லாவிடில் நல்லது சுவையிராது. அதற்காக அஞ்ஞானத்தையும், அதைக் கொளுத்தும் ஞானத்தையும் உண்டாக்கி என்னை உய்வித்தாள்" என்றார். இதைக் கேட்டதும் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியுண்டாகியது. வீட்டுக்கு வந்ததும் இவ்வெண்ணம் எல்லாம் பின் கண்ட பாடலாக மாறியது:—

கண்ணன் - என் தாய்

[நொண்டிச் சிந்து]

உண்ண உண்ணத் தெவிட்டாதே — அன்னை
உயிரெனு முலையினில் உணர்வெனும் பால்
வண்ணமுற வைத் தெனக்கே — என்றன்
வாயினில் கொண்டூட்டு மோர் வண்மையுடையாள்
கண்ணன் எனும் பெயருடையாள் — என்னைக்
கட்டி நிறை வானெனுந் தன் கையிலணைத்தே
மண்ணெனுந்தன் மடியில் வைத்தே — பல
மாய முறும் கதை சொல்லி மனங் களிப்பாள்
இன்பமெனச் சில கதைகள் — எனக்
கேற்ற மென்றும் வெற்றி யென்றும சில கதைகள்
துன்பமெனச் சில கதைகள் — கெட்ட
தோல்வி யென்றும் வீழ்ச்சி யென்றும் சில கதைகள்
என் பருவம் என்றன் விருப்பம் — எனும்
இவற்றினுக் கிணங்க என்னுள மறிந்தே
அன்பொடவள் சொல்லி வருவாள் அதில்
அற்புதமுண்டாய்ப் பரவசமடைவேன்.
விந்தை விந்தையாக வெனக்கே — பல
வித விதத் தோற்றங்கள் காட்டுவிப்பாள்
சந்திர னென்றொரு பொம்மை — அதில்
தண்ணமுதம் போல ஒளி பரந்தொழுகும்
மந்தை மந்தையா மேகம் பல
வண்ணமுறும் பொம்மையது மழை பொழியும்
முந்த ஒரு சூரியனுண்டு — அதன்
முகத்தொளி கூறுதற் கோர் மொழியிலையே.
வானத்து மீன்களுண்டு — சிறு
மணிகளைப் போல் மின்னி நிறைந்திருக்கும்
நானத்தைக் கணக்கிடவே — மனம
நாடி மிக் முயல்கினுங் கூடுவதில்லை
கானத்து மலைகளுண்டு — எந்தக்
காலமு மோரிடம விட்டு நகர்வதில்லை
மோனத்திலே யிருக்கும் — ஒரு
மொழி யுரையாது விளையாட வருங்காண்
சோலைகள் காவினங்கள் — அங்கு
சூழ் தரும் பலவித மணி மலர்கள்
சாலவு மினியனவாய் — அங்கு
தருக்களில தூங்கிடும் கனி வகைகள்
ஞால முற்றிலு நிறைந்தே — மிக
நயந் தரு பொம்மைகளெனக் கெனவே
கோலமும் சுவையு முற — அவள்
கோடி பல கோடிகள் குவித்து வைத்தார்.

இதே போல இந்தப் பாட்டில் இன்னும் 5 அடிகள் இருக்கின்றன—கண்ணன் பாட்டில் காணலாம்.

சித்திரபானுவும் மாசியும்

★

விசாகம்

மீனக்கூட்டம்

இம்மாதம் நேர்மேற்கே சூரியன் மறைந்த பிறகு அடிவானத்திற்குச் சிறிது உயரத்தில் மீனக் கூட்டம் காணப்படுகிறது. இது அழகு பொருந்திய கூட்டமல்ல. ஒளி மிக்க நக்ஷத்திரங்கள் உடைய கூட்டமுமல்ல. இராசி மண்டலத்தில், கடகத்தைப்போலவே இக்கூட்டமும் மிகச் சாதாரணமான உயர்வற்றது. ஆனால் கடகத்தைவிடப் பெரியது. கடகத்திலாவது மிகவும் அற்புதமான ப்ரெயிஸிபீ எனும் நக்ஷத்திரக் கொத்து ஒன்று காணப்படுகின்றது. மீனத்திலோ அவ்வித அழகு பொருந்திய காக்ஷிகள் எதுவும் இல்லை. ஆனால் மீனக் கூட்டத்திற்கு தனியாக ஒரு பெருமை உண்டு. அதாவது சூரியனின் வீதி (Ecliptic) ஆகாயத்தின் மத்திய ரேகையை இக்கூட்டத்தில்தான் கடக்கிறது. அந்த ஸ்தானத்திலிருந்துதான் மற்ற எல்லா கிரஹங்களின் போக்கை அளக்க ஹேதுவாயிருக்கிறது.

எல்லா ஜாதியினரும் ஏறக்குறைய இக்கூட்டத்தில் இரண்டு மீன்களின் உருவையே கண்டனர். முன் காலத்தில் வீனஸும், மன்மதனும் ஒரு நதிக்கரை வழியே உலவி வந்தார்களாம். அப்பொழுது அவர்கள் எதிரில் ஒரு அரக்கன் தோன்றினன். அவனிடமிருந்து தப்புவதற்காக வீனஸும் மன்மதனும் மீன் ரூபமெடுத்து அந்த நதியில் குதித்து ஓடினர்கள். இந்த சம்பவத்தை என்றும் அழியாமலிருக்கச் செய்வதற்காகவே மினர்வா என்ற கிரேக்கக் கடவுள் இரண்டு மீன்களை ஆகாயத்தில் நக்ஷத்திரங்களினிடையே வைத்திருப்பதாகவும், அவையே மீனக் கூட்டமென்றும் கிரேக்கர்கள் கொள்கை.

சீனர்களின் பழைய நக்ஷத்திர மண்டலங்களில் இப்பாகத்தில் ஒரு பன்றியின் உருவைக்காட்டியிருக்கின்றனர். 'ரேவதி' என்னும் நக்ஷத்திரம் இக்கூட்டத்திலிருக்கிறது. 'ரேவதி' என்றால் "பணமுள்ள," அல்லது "நிறைய" எனப்பொருள். 32 சிறு நக்ஷத்திரங்கள் ரேவதியைக் குறிப்பதாகக் கொள்கை. இந்த 32 நக்ஷத்திரங்களும் ஒரு மத்தளம் போல் அமைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இதைக் குறிக்கும் 32 நக்ஷத்திரங்களை நாம் காண்பிக்க முடியாது. பொதுவாக, இரண்டு மீன்களையும் ஒன்று சேர்க்கும் கயிற்றின் நடுவேயிருக்கும் ஒரு சிறு நக்ஷத்திரத்தையே ரேவதியாகக் கொண்டிருக்கின்றனர்.

மீனத்தின் முதல் நக்ஷத்திரம் 4-ம் தர நக்ஷத்திரம். இதற்கு ஒரு உப நக்ஷத்திரமும் உண்டு. நம் பூமியிலிருந்து சுமார் 84 ஒளி வருஷங்களுக்கப்பால் இது இருக்கிறது. இதன் இரண்டாம் நக்ஷத்திரம் 148 ஒளி வருஷத்திற்கு அப்பால் இருக்கிறது. மொத்தம் குறிப்பிடக்கூடிய ஒளி மிகுந்த நக்ஷத்திரங்கள் இக் கூட்டத்தில் இல்லை.

க்ரஹ நிலை

புதன்:—இம்மாதம் 8-ம் தேதி வரையில் புதன் தனசுக் கூட்டத்திலும் அதற்குப் பிறகு 26-ம் தேதி வரை மகரத்திலும் நகர்ந்து வருகிறது. 26-ம் தேதி கப்புறம் கும்பத்திற்கு மாறுகிறது. இம்மாத முதல் வாரத்தில் புதனை விடியற் காலையில் கீழ் வானில் காண முடியலாம். இம்மாதமெல்லாம் சூரியனுக்கு முன்பேயே உதயமாகி அஸ்தமிக்கிறது.

சுக்கிரன்:—இம் மாதத்தில் மேல் வானில் சூரியஸ்தமனத்திற்குப் பிறகு மிக அழகுடன் சுக்கிரன் பிரகாசிக்கும் அதன் ஒளி எல்லா ஆகாயக் காக்ஷிகளையும்விட சிறந்து விளங்குவது தெரிந்த விஷயம். ஆனாலும், அதைப் பார்க்கும் போதெல்லாம் அதன் ஒளி நம் மனதைக் கவர்கிறது. இம் மாதம் அதன் ஒளி இவ் வருஷத்திற்கே மிகக் குறைந்தது. ஆனாலும் கிழக்கே அப்பொழுது விளங்கும் குருவைவிட, சுக்கிரன் ஒளி மூன்று மடங்கு அதிகம். இம்மாதம் 8-ம் தேதி வரை கும்பக் கூட்டத்திலும் அதற்குப் பிறகு மீனக் கூட்டத்திலும் சுக்கிரன் ஊர்ந்து செல்லும். ஒரு பைனகுலர்ஸ் வழியாகச் சுக்கிரனைப் பார்த்தால் அது ஏறத்தாழ முழுச் சந்திரன் போல் காணப்படும். நாள் செல்லச் செல்ல சுக்கிரன் தேய்ந்தது வருவதைக் காணலாம்.

குஜன்:—இம்மாதமெல்லாம் தனுசுலேயேகழிக்கிறது. மாத முதலில் அது விடியற்காலை 4-30 மணிக்கு உதயமாகிறது. இதை சுலபமாக கீழ்வானில் சூரிய உதயத்திற்கு முன் காணலாம்.

குருவும்; சனியும்:—முறையே மிதுனத்திலும், ரிஷபத்திலும் இருக்கின்றன. மாதமுதலில் குரு இரவு 11 மணிக்கு உச்சிக்கு வருகிறது. சனியோ 8-மணிக்கே உச்சியை அடைந்து விடுகிறது. சுக்கிரனுக்கடுத்தாப்போல் குருவின் பிரகாசமே சிறந்து விளங்குகிறது. குரு இம்மாதம் 28-ம் தேதி வரையில் வக்ரத்திலிருக்கிறது.

பிறகு வக்ரநிவர்த்தியடைந்து கடகத்தை நோக்கி ஊர்ந்து செல்ல ஆரம்பிக்கிறது.

உரானஸும் நெப்டியூனும்:—முறையே ரிஷபத்திலும், கன்னியிலும் ஊர்ந்து வருகின்றன.

இம்மாதம் 8-ம் தேதியன்று (20—2—43) ஒரு பார்சுவ சந்திர க்ரஹணம் சம்பவிக்கிறது. ஆனால் இக்கிரஹணம் இந்தியாவில் தெரியாது.

ஜோதிடத்தில் பிரியமுள்ளவர்கள் பொருட்டு கீழே இம்மாதத்திய இராசி சக்கரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

		சனி	குரு
சூரியன் சுக்கிரன் கேது	9௨—மீன—சுக்கிரன் 13௨—மகர—குஜன் 24௨—கும்ப—புதன்		
புதன்			ராகு
குஜன்			

ஸ்டாலின் புகைப் படம்.

★

அமெரிக்கப் பெண்ணின் அனுபவம்

'க்ரெம்லின்' என்பது ரஷ்ய சர்க்கார் காரியாலயம். ஸ்டாலின் வசிப்பதும் அங்குதான். பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் மாஸ்கோ சென்று அவரைக் கண்டு பேசினர். ஆனால் ஸ்டாலினின் தோற்றம் குறித்து அவர் எத்தகைய அபிப்பிராயம் கொண்டாரோ தெரியாது. மார்கரெட் பர்க் வொயிட் ஒரு அமெரிக்கப் பெண். அவர் ஸ்டாலினின் தோற்றத்தைப் பின் வருமாறு சித்தரித்திருந்தார்:—நல்ல உயரம்; கட்டு மஸ்தானதேகம்; பருத்த உடல். ரஷ்யாவில்அவரது உருவச் சிலை இல்லாத இடமே கிடையாது. விமான கூடம், பார்க், ஹோட்டல் முதலிய எல்லா இடங்களிலும் அவரது சிலையைப் பார்க்கலாம். அவற்றைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் "இந்த ஸ்டாலின் மனித சிருஷ்டியல்ல. அதற்கு மேற்பட்டவர்" என்று தான் முடிவு செய்வார்கள். மார்கரெட் மேலும் கூறுவதாவது:—

நேரில் கண்ட போது

நான் ஸ்டாலினின் ஆபீஸுக்குப் போயிருந்தேன். அங்கு அவர் நின்றுகொண்டிருந்தார். ஆனால் அங்கு நான் கண்ட ஸ்டாலின் வேறு. என்னை விட அவர் குட்டைதான். நானே 5 அடி 5 அங்குல உயரம். ஸ்டாலின் அதை விட உயரத்தில் கட்டை. குட்டை மட்டுமல்ல. உருவும் சிறிதுதான். முகம் சாம்பல் நிறம். அதில் சுருக்கம் விழுந்திருந்தது. எளிய முறையில், பார்வைக்கு அழகாக உடுத்திருந்தார்.

ரஷ்ய பாஷை எனக்கு நன்கு தெரியாது. கொஞ்ச நேரம் அவரோடு சம்பாஷித்தேன். ஸ்டாலின் தாயாரைப் பற்றியே பேசினேன். பல வருஷங்களுக்கு முன்பு நான் இங்கு வந்தபோது அவருடைய தாயாரைப் படம் பிடித்திருக்கிறேன். அவர் இப்போது இறந்துவிட்டார். ஸ்டாலினுக்கு நான் எடுத்த அந்தப் படத்தை அனுப்பியிருந்தேன். அதை அவர் இன்னும் வைத்துக்கொண்டிருக்கிறார்.

ஸ்டாலினைப் படமெடுக்க வேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசை. எனவே அவரோடு கொஞ்ச நேரம் தான் பேசினேன். எனக்கு என் வேலையில் திருஷ்டி! ஸ்டாலின் முகம் உறுதியானது. காரியவாதி என்பதைக் குறிக்க வல்லது. கல்லால் செதுக்கப்பட்டது போல்விருக்கும். நான் என் 'காமிராவை வைத்துக் கொண்டு படம் பிடிப்பதற்காக மண்டிபோட்டுக் கொண்டு தரையில் உட்கார்ந்தேன். படத்தில் கல்போன்ற அவரது முகத்துக்கு எப்படி ஜீவகளையை ஊட்டுவது என்பதுதான் என் கவலை.

படமெடுத்த விதம்

ஆனால் அங்கு ஒரு விஷயம் நடந்தது. அது எனக்கு உதவியாக முடிந்தது. நான் மண்டியிட்ட வண்ணம் தவழ்ந்து கொண்டே வளைய வந்தேன். க்ரெம்லின் விடுதியில் அமெரிக்கப் பெண்ணொருத்தி தரையில் இப்படி மண்டியிட்டுத் தவழ்ந்து வருவதை ஸ்டாலின் இதற்கு முன்கண்டதில்லை போலும்! எனவே என் செய்கையைக் கண்டு திடீரென்று சிரித்துவிட்டார்! அப்போது அவர் முகம் முழுதும் மாறுதலடைந்தது. ரொம்ப சந்தோஷமாகக் காணப்பட்டார். கடைசியில் நான் எனக்கு வேண்டிய படத்தை எடுத்து விட்டேன்! நான் காமிராவை மூடியதும் ஸ்டாலினின் முகம் மீண்டும் மாறுபாடடைந்ததைக் கண்டேன். நான் புறப்படும் சமயத்தில் ஸ்டாலினின் புன்முறுவல் பூத்த முகத்தில் புரட்சிக் களை தட்டியது. மறுபடியும் அவர் கல்லாக சமைத்தது போல முகத்தை வைத்துக் கொண்டார். இது வரை எவ்வளவோ பேரை படம் பிடித்திருக்கிறேன். ஆனால் ஸ்டாலினைப் போல உறுதியுள்ளவரைப் படமெடுக்கச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை.

—'பம்பாய் கிரானிகிள்'

Dr. Paul's Pure Lotus Honey

The Infallible Medicine for Cataract Glaucoma, Ophthalmia, Ulcers of Eyes, and all other eye diseases. Acts like Magic. Money back in case of failure. Price Two Dram Phial Rs. 2. V. P. Extra.

S. PAUL & CO., (Dept. S. W.)
4, Hospital Street, Dharamtola, CALCUTTA.

சிறுவர் பகுதி

★

சொக்கனின் கர்வ பங்கம்

★

எம். எஸ். கமலா

சில காலத்திற்கு முன் பூபதி முதலியார் என்றொரு பெரிய மிராசுதார் இருந்தார். இயன்றமட்டில் தான தர்மம் செய்துக் கொண்டு பூபதி முதலி என்ற பெயரை நிலை நிறுத்திக் கொண்டார். அவர் கிராமத்தை சுற்றி கன்னி வாய்க்கால் என்றொரு சிற்றாறு ஓடிக் கொண்டிருந்தது.

ஆடி மாதம். ஒருநாள் கன்னி வாய்க்காலில் நிறைய ஜலம் ஓடிக் கொண்டிருந்தது. காலைக் கடன்களை முடித்துக் கொள்ள ஆற்றங்கரைக்கு சென்ற முதலியார், வெள்ளத்தில் புரண்டு வந்து கரையில் ஒதுக்கப்பட்டிருந்த ஓர் ஐந்து வயது சிறுவனைப் பார்த்தார். அவனை தன் வீட்டிற்கு எடுத்துசென்று சிகிச்சை செய்து தேற்றினர். அவன் யார்? எக் குலம் என்பது அவனுக்கும் சொல்லத்தெரியாது" உன் பேரென்னடா?" என்றால் 'சொக்கன்' என்று சொல்வான். பூபாலருக்கும் குழந்தைகளில்லை. அச்சிறுவனை அன்பாய் வளர்த்தார். அவன் எப்பொழுதும் மாட்டுக் கொட்டிலில் மாடுகளுடன் விளையாடிக் கொண்டும், கன்றுகளுடன் குதித்துக் கொண்டும் இருப்பான். அவன் இயல்பை காண்பவர்கள் நகைப்பார்கள். அவன் அதைப்பற்றி வருந்தமாட்டான். வயதுசெல்லச் செல்ல மாடுகளைக் காட்டிற்கு அழைத்து சென்று மேய்த்து, மாலை கன்னியாற்றில் நீரைக் காட்டி, கொட்டிலில் சேர்த்தபின் பாலைகறப்பான். அவைகளுக்கு வேண்டிய தீனியைத் தன் கையிலேயே கொடுத்து விட்டு பிறகு படுக்கச் செல்வான் அவன். ராசி பசுக்களும் நன்றாயிருந்தன.

ஒரு நாள் 'சொக்கன்' பசுக்களை மேய்க்க அழைத்து சென்றான். சில பசுக்களை ஆற்றில் இறக்கி தேய்த்துக் கழுவிக்கொண்டிருந்தான். இப்படி கழுவிக்கொண்டிருக்கும் போது ஓர் பசு சற்று முரண்டு நான்கடிகள் பின் வைத்து ஓட முயன்றது. அப்படி ஓட முயன்ற போது கால் சறுக்கி வீழ்ந்தது. சொக்கன் அப்பசுவை மெள்ள தட்டி எழுப்பினன். அது எழுந்து நின்ற இடத்தில் நல்ல கருங்கல் வழவழவென்றிருந்தது. அக்கல் சரிந்திருந்ததைப் பார்த்த 'சொக்கன்' மற்ற மிருகங்களும் விழுந்தால் என்ன செய்வதென்று யோசித்து கல்லை அவ்விடம் விட்டு அப்புறப்படுத்த தன் முழு பலத்தையும் உபயோகித்தான். கஷ்டப்பட்டு கல்லை வெளி எடுத்து போட்டதும் அக்கல் இருந்த இடத்தின்கீழ் கண்களைக் கவரும் தங்க நாணயங்களும் நகைகளும் ஓர் பெரிய பாத்திரத்தில் இருக்கக் கண்டான். அவனுக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. குதித்தான் கூத்தாடினன். மறுபடியும் கல்லை அதன் மேலேயே மூடிவைத்தான். மாடுகளை மேய்த்துக் கொண்டு வேளைக்கு வீட்டிற்கு வந்தான். அவன் முகத்தில் என்றுமில்லாத ஆனந்தம் துள்ளிவிளையாடிற்று.

தினமும் காலை எழுந்ததும் பால் கறப்பது. உண்பதுகூட இல்லை. பசுக்களை ஓட்டிக்கொண்டு காட்டிற்கு செல்வது. ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து ஆற்றங்கரைக்கு சென்று புதையலை பார்த்து ஆனந்தம் கொள்வதுஇப்படியாகவேஇருந்தான். ஒரு நாள் பூபாலர் இவன் சரியாய் உணவு கொள்ளாமல் பைத்தியத்தைபோல் மிகவும் ஆனந்தமாய் இருப்பதைப் பார்த்து, "ஏய், சொக்கா! என்னடா 'கொண்டாட்டம்?" என்றார்.

"என்னை, சொக்கா! சொக்கா! என்று கூப்பிடுகிறீர்களே? சொக்கநாதான்னு கூப்பிடக் கூடாதா?" என்று சற்று கர்வம் கலந்த குரலில் கேட்டான். 'பூபாலர்' அவனுக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டிருக்கிறதென்று நினைத்து "சொக்கநாதா" என்று கூப்பிடத் தொடங்கினர்.

சில நாட்களுக்குப் பின் 'பூபாலர்' ஒரு நாள் "சொக்கநாதா! அடுத்த கிராமத்திற்கு சென்று என் மைத்துனனை அழைத்துவா!" என்றார். சொக்கனின் புதையலின் பணமஹிமை அவன் ஹிருதயத்தினுள் தற்பெருமையையும் இறுமாப்பையும் உதிக்க செய்தது. அவன் உடனே "உங்கள் வேலைக்காரத்தானே போக வேண்டும்? அதற்கு இப்படித்தான் வேலையாளை ஏவுவதைப்போல் சொல்வதோ? சொக்கநாத பிள்ளையவர்களே! தயவு செய்து என் மைத்துனனை அழைத்து வருகிறீர்களா?" என்று கேட்டுக் கொள்ளக்கூடாதோ? என்று கேட்டான். பூபாலருக்கு ஒன்றும் தோன்றவில்லை. அவன் மாறுதலுக்குக் காரணம் அறிய பிரயத்தனம் செய்யத் தொடங்கினர்.

அவன் கிராமத்திலிருந்து வந்ததும் தாயைக்காணச் செல்லும் கன்றைப்போல் ஆவலுடன் கன்னியாற்றங்கரைக்கு செல்வதை பார்த்ததும், பூபாலர் அவனுடைய பரபரப்பிற்கு வியந்து அவனறியாமல் அவனைப் பின் தொடர்ந்து சென்றார். அவன் ஆற்றங்கரைக்கு சென்று புதையலை எடுத்து பார்த்து திருப்தியுடன் கண்கள் ஜ்வலிக்க. வீடு நோக்கிச் சென்றான். அவன் சென்றதும் 'பூபாலர்' அப்புதையலை எடுத்துக் கொண்டு வீடு சென்றார். மறுநாள் காலை சொக்கன் தன் வேலைகளை முடித்துக் கொண்டு காட்டிற்குச் சென்றான். புதையலிருக்குமிடம் காலியாயிருப்பதை கண்டதும் கண்ணீர் வடித்தான். அவன் உள்ளத்துள் குடி கொண்டிருந்த கர்வமும் பெருமையும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன. மாடுகளும் மந்தை சேர்ந்து வீட்டை நோக்கி செல்ல ஆரம்பித்தன. அவன் அப்படியே வீற்றிருந்தான்.

பணத்தைக் கண்டே நிரம்பி இருந்த வயிறு இன்று சோற்றுக்கு அலையத் தொடங்கியது. வீட்டிற்கு அதிக நேரம் பொறுத்து அழுது வடிந்து கொண்டு வரும் சொக்கனைப் பார்த்து 'பூபாலர்' "சொக்கநாத பிள்ளையவர்களே! என் இத்தனை நேரம்? சாப்பிட வாருங்கள்" என்றழைத்தார்.

அதற்கு 'சொக்கன்' "அய்யா!" 'பழைய சொக்கன் என்ற பெயரே போதும் என்று துக்கத்துடன் சொன்னன். 'பூபாலர் தம் முன்தாமே சிரித்துக் கொண்டார். பூபாலருக்குப் பிறகு அத்தனை சொத்திற்கு சொந்தக்காரனையும் "பழைய சொக்கனு"யே பசுக்களுடன் ஆனந்தமாய் காலம் கழிக்கிறான் 'சொக்கன்'.

அட்டைப் படத்தில் யார்?

★

அட்டே தான்! துருக்கிப் பத்திரிகைக்காரர் கோஷ்டித் தலைவர் பெயர் அது. அவரும் 'ஹிந்து' ஆசிரியர் ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸனும் சம்பாஷிக்கிறார்கள்.

அல்லயன்ஸ் சமீப வெளியீடுகள்

		ரூ.அ.			ரூ.அ
1.	தேசபக்தன் கந்தன்	2 0	7.	மஹான் மணி ஐயர்	1 0
2.	பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள்	2 4	8.	ஆண்டாள்	1 0
3.	இந்தியக் கதைத் திரட்டு	2 4	9.	ஏசு கிறிஸ்து	0 12
4.	சிசுபாலனம் (ராஜாஜி எழுதியது)	0 8	10.	ஹேமநளினி	அச்சில்
5.	அனுபமா	0 8			
6.	இந்துமதி	0 10	11.	புயல் (மஹா கவி டாகூர்)	அச்சில்

அல்லயன்ஸ் கம்பெனி, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.